REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மே 3 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 103 | Wednesday 03, May, 2023 | 16பக்கங்கள் | 50/-

## கிராம சேவகர் சேவைக்கு 60 வருடங்கள் பூர்த்தி;
### ஜனாதிபதி ரணில் வாழ்த்து

நாட்டில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக முன்னின்று சேவையாற்றிய மற்றும் தற்போது சேவையாற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர் சேவை 06

## சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் ஜனாதிபதி பங்கேற்பு
### நாளை பிரிட்டன் பயணமாகிறார்




லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

லண்டனின் புராதனமான வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் விழாவில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உலகத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர். 1953 ஆம் ஆண்டு மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்ட 06

## உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்று அனுஷ்டிப்பு



உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்று (03) உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலக பத்திரிகை சுதந்திர தினத்தின் இவ்வருடத்துக்கான கருப்பொருள் 'உரிமைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பது: மற்றைய அனைத்து மனித உரிமைகளுக்கும் ஒரு இயக்கியாக கருத்துச் சுதந்திரம்' என்பதாகும்.

பத்திரிகை நிறுவனங்கள் அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துக்களை சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தலும் தடைகளுமின்றி உள்ளதை உள்ளவாறு மக்களுக்கு வெளியிடுவது பத்திரிகை சுதந்திரம் என்று வரை 06

### உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்
## பொதுமக்களின் யோசனைகளை பெறும் காலம் மே 31 வரை நீடிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான காலம், மே 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே, இக்காலப்பகுதிக்குள் பொதுமக்கள், சிவில் அமைப்புகள் தமது யோசனைகள் மற்றும் கருத்துக்களை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் உள்ளதாகவும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் யோசனைகள் மற்றும் கருத்துக்களை எழுத்து மூலம் முன்வைக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார். 06

# லிற்றோ Gas விலை இன்று முதல் குறைப்பு
### லிற்றோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

சமையல் எரிவாயு விலைகள் இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர் உட்பட அனைத்து ரக சிலிண்டர்களின் விலைகளையும் குறைக்க திட்டமிட்டுள்ளதாகவும் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

இன்றைய தினம் விலைக் குறைப்பு தொடர்பான அறிவித்தல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த முறை சமையல் எரிவாயுவின் விலை 1,005 ரூபாவால் குறைக்கப்பட்டது. இன்றைய தினம் மேலும் ஒரு தொகையால் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோமென்றும் குறிப்பிட்டார்.

இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில், விலைக்குறைப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். ஏனைய சிலிண்டர்களின் விலைகளும் குறைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதேபோன்று மற்றைய சமையல் எரிவாயு விநியோக நிறுவனமும் விலையை குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ADB அதிகாரிகளுடன் அமைச்சர் அலி சப்ரி விசேட கலந்துரையாடல்



இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் சங்மின் ரியுவுடன், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கலந்துரையாடியுள்ளார்.

தென் கொரியாவின் 06



அலங்கார மீன் வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்கள்
அந்நியச் செலாவணியை உள்ளீர்க்க திட்டம் 03

## எரிபொருள் நிலையத்தில் கொள்ளையர் கைவரிசை
### CCTV மூலம் மடக்கிப்பிடித்த பொலிஸார்



கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்ப வந்த இருவர், அங்கிருந்த 71,000 ரூபாவை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை 06

### மகாத்மா காந்தியின் பேரன்
## அருண் மணிலால் காந்தி காலமானார்



அஹிம்சையை உலகுக்கு போதித்த தேசதந்தை மகாத்மா காந்தியின் பேரனும் எழுத்தாளருமான அருண் மணிலால் காந்தி நேற்று காலமானார்.

மராட்டியத்திலுள்ள 06

### 67 விசேட வைத்திய நிபுணர்கள் உட்பட
## பயிற்சிகளுக்காக சென்ற டாக்டர்கள் தலைமறைவு

லோரன்ஸ் செல்வநாயகம்



சுகாதாரத்துறை தொடர்பில் பல்வேறு மேலதிக பயிற்சிகளை மேற்கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள அரசாங்க மருத்துவர்களில், சுமார் 400 பேர் மீண்டும் நாட்டுக்குத் திரும்பவில்லையென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறு சென்றுள்ளவர்களில் 67 விசேட மருத்துவ நிபுணர்களும் உள்ளடங்குவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன: 06

## நாட்டில் அமைதியான மே தின நிகழ்வுகள்
### அமைச்சர் டிரான் அலஸ் நன்றி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் தனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற மே தினக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் அமைதியான 06

## நாட்டில் மக்கள் தொகையை விடவும் அதிக தொலைபேசிகள்
### மூன்று கோடியை தாண்டிய phone பாவனை



நாட்டின் சனத்தொகையை விடவும் தொலைபேசி பாவனை அதிகமுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசிகள் உட்பட மூன்று கோடியே பதின்மூன்று இலட்சத்து எண்பத்திரண்டாயிரம் (31,382,000) தொலைபேசிகளை மக்கள் பயன்படுத்துவதாக தெரிய வந்துள்ளது.

நாட்டின் மக்கள் 06

### கொழும்பில் நேற்று கடும் மழைவீழ்ச்சி பதிவு
## மழையுடனான காலநிலை 08 வரை தொடரலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை எதிர்வரும் 08ஆம் திகதி வரை தொடரலாமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### இடி, மின்னல்களிலிருந்து பாதுகாப்பு பெற கோரிக்கை

அதேவேளை நேற்றுக் காலை கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு 06

## போலி இந்திய e-visa குறித்து இந்திய தூதரகம் எச்சரிக்கை
### 157 இணையதளங்களையும் பெயரிட்டு அறிவுறுத்து



இந்திய இலத்திரனியல் விசா (evisa) வழங்குவதாகக் கூறி மோசடியில் ஈடுபடும் பல இணையத்தளங்கள் தொடர்பில், நாட்டிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பல, போலி மற்றும் மோசடியான இணைய 06



டீசல் விலை 20 ரூபா குறைந்தால் மட்டுமே பஸ் கட்டணம் குறையும்
தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் 03



SJB க்கு எதிரான டயனாவின் மனு: ஜூன் 08இல் விசாரணை
உச்ச நீதிமன்றம் தீர்மானம் 03



ஆதிவாசிகள் தலைவரின் ரிட் மனு: செப்டெம்பர் 08 இல் விசாரணை
மகாவலி அதிகாரசபையில் அதிருப்தி 03

## கொழும்பு துறைமுக பகுதியில் இரும்பு களவாடியோர் மீது துப்பாக்கிச் சூடு
### 08 பேர் காயத்துடன் வைத்தியசாலையில்



கொழும்பு துறைமுகத்தின் ஆறாவது நுழைவாயிலுக்கருகில் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர், துப்பாக்கிச் சூடு நடத்தியதில், எட்டுப் பேர் காயமடைந்தனர். இவர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 06

## நீதிமன்றத்தை நாடவுள்ளதாக வசந்த கரன்னாகொட தெரிவிப்பு



### அமெ. தூதுவருக்கும் கடிதம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தம்மையும் தமது பாரியாரையும் அமெரிக்காவுக்குள் 06

## பொலிஸ் சீருடையுடன் மேடையில் பாடல் இசைப்பு
### களனியில் கான்ஸ்டபிள் பணிநீக்கம்

களனி, பியகம வீதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில், பாடிக் கொண்டிருந்த ஒருவருடன், பொலிஸ் சீருடையில் பாடிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் 06

## பால் மாவின் விலைகள் மேலும் குறைவடையலாம்
### பால் மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் 06

# சர்வதேச செய்திகள்

## முடிசூட்டு விழாவுக்கான மன்னர் ஆடைகள் தயார்



பிரிட்டன் மன்னர் சார்ல்ஸ், முடிசூட்டு விழாவின் போது அணியவிருக்கும் நூற்றாண்டு பாரம்பரியமிக்க தங்கத்திலான ஆடைகள் தயார்படுத்தப்பட்டு வருகின்றன.

லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் வரும் 6ஆம் திகதி முடிசூட்டு விழா நடைபெறவுள்ளது. அதில் மன்னர் சார்ல்ஸ் இரண்டு வரலாற்று சிறப்பு மிக்க ஆடைகளை அணியவுள்ளார்.

இதில் ஓர் ஆடை 1821ஆம் ஆண்டு அப்போதைய மன்னர் 4ஆம் ஜோர்ஜுக்காகவும், மற்றொன்று 1911ஆம் ஆண்டு மன்னர் 5ஆம் ஜோர்ஜுக்காகவும் வடிவமைக்கப்பட்டவை. இந்த ஆடைகளை ராணி எலிசபெத் அவரது முடிசூட்டு விழாவின் போது அணிந்திருந்த நிலையில், 70 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த ஆடைகள் மன்னர் சார்ல்ஸின் முடிசூட்டு விழாவில் பயன்படுத்த தயாராகி வருகின்றன.

## சூடானில் இருந்து 800,000 பேர் வெளியேறும் அச்சம்



சூடானில் உக்கிர மோதல் தொடரும் நிலையில் 800,000 பேர் வரை அங்கிருந்து வெளியேறலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

போர் நிறுத்தத்தை மீறி தலைநகர் கார்டூமில் மீண்டும் குண்டுச் சத்தம் கேட்ட வண்ணம் உள்ளது. சூடானில் மூன்றாவது வாரமாக வன்முறை தொடர்கிறது.

அருகிலுள்ள எகிப்து, சாட், மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு 10,000 க்கும் அதிகமானோர் தப்பிச் சென்றுவிட்டனர்.

சூடானில் இராணுவத்துக்கும், அதன் துணை இராணுவ ஆதரவுப் படைக்கும் இடையிலேயே மோதல் நீடிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானத் துறை அதிகாரி மார்ட்டின் கிரிபித்ஸ் நேற்று (2) பின்னேரம் சூடானை சென்றடைந்தார்.

சூடானில் வசிக்கும் மில்லியன் கணக்கானோருக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான வழிகளை அவர் ஆராய்வார். சூடானில் மனிதாபிமான நிலைமை மோசமடைந்து பேரழிவை எட்டுவதாக கிரிபித்ஸ் குறிப்பிட்டார்.

## செயற்கை நுண்ணறிவு குறித்து அதன் முன்னோடி எச்சரிக்கை

### அறிவில் மனிதனை விஞ்சும் அபாயம்



செயற்கை நுண்ணறிவின் தந்தை என பரவலாக அழைக்கப்படும் ஜெப்ரி ஹின்டன், இந்தத் துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் பற்றி எச்சரித்திருப்பதோடு, தனது பணியில் இருந்து விடைபெற்றுள்ளார்.

கூகுளில் இருந்து இராஜினாமா செய்த 75 வயது ஹின்டன், தனது பணிகளுக்காக வருத்தம் தெரிவித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு உரையாடல் திறன் கொண்ட சாட்பொட்கள் அபாயம் கொண்டவை என்று அவர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். "இப்போது அவை எம்மை விட அறிவுடையவை இல்லை என்பதை என்ன கூற முடியும். ஆனால் விரைவில் அவை அந்தத் திறனை பெற்றுவிடும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரும் தொழில்நுட்ப நிறுவத்தில் இருந்து விலகுவதற்கு தனது வயதும் காரணமாக இருந்தது என்று அவர் ஒப்புக்கொண்டார். "எனக்கு 75 வயதாகிறது, எனவே ஓய்வுபெறும் நேரமாகும்" என்றார்.

சாட்ஜி.பீ.டீ போன்ற தற்போதைய செயற்கை நுண்ணறிவு முறைகளுக்கு வழிவகுக்கும் ஆழ்ந்த கற்றல் மற்றும் நரம்பியல் வலையமைப்புகள் ஆய்வில் காலாநிதி ஹிடன் முன்னோடியாக செயற்பட்டவராவார்.


என்றாலும் சாட்பொட் மனித மூளை வைத்திருக்கும் தகவல்களின் அளவை விரைவில் முந்திவிடும் என்று கணினி விஞ்ஞானியும் அறிவாற்றல் உளவியலாளருமான ஹின்டன் குறிப்பிட்டார்.

"தற்போது, ஜி.பீ.டீ4 ஒரு நபரிடம் உள்ள பொது அறிவின் அளவைக் கிரகணமாக்குவது மற்றும் அவற்றை நீண்ட தூரம் கிரகணம் செய்வதை பார்க்க முடியும். பகுத்தறிவு ரீதியில் அவ்வளவு சிறப்பாக இல்லை, ஆனால் அது ஏற்கனவே எளிமையான பகுத்தறிவை செய்கிறது. எனவே இது பற்றி கவலைப்பட வேண்டும்" என்று எச்சரித்தார்.

தவறாக செயற்படுபவர்கள் தவறான விடயத்திற்காக செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தக் கூடும் என்று நியூயோர்க் டைம்ஸில் வெளியான கட்டுரையில் அவர் எச்சரித்துள்ளார்.

"இது ஒரு வகையான மோசமான சூழ்நிலை, ஒரு வகையான பயங்கர நிலை" என்று எச்சரித்துள்ளார்.

## பிரதமர் வேட்பாளர் குழந்தை பிரசவம்



தாய்லாந்தில் பொதுத் தேர்தலுக்கு இரண்டு வாரங்களே உள்ள நிலையில் பிரதமர் வேட்பாளர் பாய்தோங்டார்ன் ஷினவத்ராவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

கடந்த திங்கள் (01) காலை பிள்ளை பிறந்ததை அவரின் கட்சி உறுதிசெய்துள்ளது.

வரும் 12ஆம் திகதி பாங்கொக் நகரில் நடைபெறவிருக்கும் இறுதிப் பிரசாரத்தில் பாய்தோங்டார்ன் நிச்சயமாகக் கலந்துகொள்வார் என்று கூறப்பட்டது. பிள்ளை பிறந்த செய்தியைத் பாய்தோங்டார்ன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துகொண்டார்.

## சைக்கிள் ஓட்டினால் ஊக்கத் தொகை



சைக்கிளில் வேலைக்குச் செல்வோருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் பெல்ஜியத்தில் கடந்த மே 1 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளது. தனியார் நிறுவனங்களும், தொழிற் சங்கங்களும் ஜனவரியில் ஓர் உடன்பாடு செய்து கொண்டன. அதன் ஓர் அங்கமாக ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

சைக்கிளில் வேலை இடத்துக்குச் செல்லும்போது ஒரு கிலோமீற்றருக்கு 0.30 டொலர் வழங்கப்படும். அதற்கு வரி விதிக்கப்படாது.

ஒரு நாளில் 40 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் செல்லலாம். மாதச் சம்பளத்துடன் அந்த ஊக்கத் தொகையும் வழங்கப்படும். பாரம்பரிய சைக்கிள்கள் மட்டுமல்ல, மின்சைக்கிள் போன்றவற்றை ஓட்டினாலும் ஊக்கத் தொகை பெறலாம்.

## இஸ்ரேல் சிறையில் உண்ணாவிரதம் இருந்த பலஸ்தீனக் கைதி மரணம்



பலஸ்தீன போராட்டக் குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் மூத்த உறுப்பினரான காதர் அத்னன் இஸ்ரேலிய சிறையில் 86 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று (02) காலை அவர் உணர்வற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேலிய சிறைச் சேவை தெரிவித்துள்ளது. அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சி தோல்வி அடைந்ததாக அது தெரிவித்தது.

அவர் மருத்துவ சோதனைகள் மற்றும் சிகிச்சைகளையும் மறுத்து வந்ததாக இஸ்ரேலிய சிறைச் சேவை குறிப்பிட்டது.

அவரது மரணச் செய்தி அறிவிக்கப்பட்டதை அடுத்து காசா பகுதியில் இருந்து குறைந்தது மூன்று ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலை நோக்கி வீசப்பட்டுள்ளன. இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

அத்னன் சிறையில் மரணித்தால் இஸ்ரேல் கடும் விலைகொடுக்க வேண்டி இருக்கும் என்று காசாவை தளமாகக் கொண்ட இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு முன்னதாக எச்சரித்திருந்தது.

44 வயதான காதர் அத்னன் மீது பயங்கரவாதக் குழுவுடன் இணைந்திருந்தது மற்றும் வன்முறையைத் தூண்டியதாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த மாதம் அவர் வழக்கு விசாரணையை எதிர்கொள்ளவிருந்தார்.


ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரைச் சேர்ந்த அத்னன், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இஸ்ரேலிய சிறையில் இருப்பவரும் வெளியேறுபவராகவும் இருந்து வந்தார்.

அவர் ஐந்து தடவைகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவராவார்.

"மிகக் கடினமான தடுப்புக்காவல் சூழலில் அவர் எந்த ஓர் உதவியையும், மருத்துவ சோதனைகளையும் மறுத்து வருகிறார்" என்று அத்னனின் மனைவி ரன்டா மூசா அவர் மரணிப்பதற்கு முன்னர் கூறியிருந்தார்.

இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இஸ்ரேலிய சிறைகளில் சுமார் 4,900 பலஸ்தீனர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 1000க்கும் அதிகமானவர்கள் எந்தக் குற்றச்சாட்டும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## எவரெஸ்டில் அமெ. மலையேறி மரணம்



அமெரிக்காவைச் சேர்ந்த 69 வயது மலையேறி எவரெஸ்ட் சிகரத்தில் உயிரிழந்ததாக பயண ஒருங்கிணைப்பாளர் நேற்று (2) தெரிவித்தார்.

சுமார் 6,400 மீற்றர் உயரத்தில் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது உடல் நலக் குறைவால் அவர் உயிரிழந்தார். இரண்டாம் முகாமில் கடந்த திங்கட்கிழமை (1) அவ்வாறு நேர்ந்ததாக ஒருங்கிணைப்பாளர் கூறினார். உயிரிழந்தவரின் உடலை அடிவாரத்துக்குக் கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மோசமான வானிலையால் அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மலையேறி உயிரிழந்ததால் மற்ற குழுவினருக்கு வழியில் அபாயம் ஏதும் இல்லை என்று பயண ஒருங்கிணைப்பு நிறுவனம் தெரிவித்தது.

## குளவி கொட்டுக்கு இலக்காகி பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

**(மஸ்கெலியா தினகரன் விசேட, தலவாக்கலை குறுப் நிருபர்கள்)**



மலையகத்தில் குளவிக்கொட்டு சம்பவங்களினால் நாளாந்தம் பலர் பாதிக்கப்படுகின்றனர். பலர் குளவித் தாக்குதலினால் உயிரிழந்த சம்பவங்களும் உண்டு.

அந்தவகையில் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலிபடை தமிழ் வித்தியாலய மாணவர்கள் நால்வர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குளவிக் கொட்டினால் மூன்று பெண் மாணவிகளும் ஒரு ஆண் மாணவனும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எலிபடை தமிழ் வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி பயின்று வருகின்றனர். குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களை தோட்ட தொழிலாளர்கள் உடனடியாக முன்வந்து முதலுதவிகளை வழங்கி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

எனவே தொடரும் குளவிக் கொட்டு சம்பவங்களுக்கு நிரந்தர தீர்வை காணும் வகையிலான பொறிமுறையொன்று விரைவில் மலையகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



## மலைச்சாரல்

## தொழிலாளர்களின் போராட்டங்கள் திட்டமிட்ட வகையில் நசுக்கப்படுகின்றன

### இலங்கை செங்கொடி சங்க தலைவர் செல்லையா சிவசுந்தரம்



**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**

தொழிலாளருக்கு எதிரான சகல வன்முறைகளையும் நிறுத்துமாறு இலங்கை செங்கொடி சங்க தலைவர் செல்லையா சிவசுந்தரம் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலிய புரவுன்சீக் தோட்டப் பிரிவு முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் நடைபெற்ற தொழிலாளர் தின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இன்று தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, உழைப்புக்கான ஊதியம், வேலைத்தள பாதுகாப்பு, கர்ப்பிணி தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு, போன்ற பல்வேறு விடயங்கள் கேள்விக்குறியாகியுள்ளன. வறுமை, போசாக்கின்மை சிறுவர் கல்வி இடைவிலகல், சிறுவர் உழைப்பு போன்றன அதிகரித்துவருகின்றன. இதனை எதிர்த்து செயற்படும் தொழிலாளர்களின் போராட்டங்களும் திட்டமிட்ட வகையில் நசுக்கப்பட்டு வருகின்றது.

200 ஆண்டுகளாக இந்த நாட்டுக்காக பாரிய பொருளாதாரத்தை உழைத்துக்கொடுத்த பெருந்தோட்ட தொழிலாளர்களின் நிரந்தர தொழில், தற்போது தற்காலிக தொழிலாக மாற்றம் அடைந்து வருகின்றது. அதேபோல் ஆடை தொழிற்சாலை தொழிலாளர்களை கம்பெனிகள் அடிமைகளாக நடத்தும் விதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

எனவே இச்செயற்பாடுகளை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர சகல தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் பேதமின்றி ஒன்று திரள வேண்டும் என அவர் தெரிவித்தார்.



மலையகம் 200 எனும் தொனிப்பொருளை மையப்படுத்தி மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த நிகழ்வொன்று அண்மையில் ஹற்றன் மலையக மக்கள் முன்னணியின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மலையக இளைஞர் யுவதிகளுக்கான வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவ பயிற்சி செயற்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

(படம் – நுவரெலியா தினகரன் நிருபர்)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மே 3 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.38 |
| ளுஹர் | 12.09 |
| அஸர் | 03.26 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.31 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் சித்திரை 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அலங்கார மீன் வளர்ப்பில் நவீன தொழில் நுட்பங்கள்

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

அலங்கார மீன் தொழில்துறை மற்றும் நீர்த்தாவரத் துறைகளில் நவீன தொழினுட்பம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டும் பிரதான வழிகளாக உள்ள இவற்றில்,பண்ணையாளகர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் நோக்குடனே இத்துறைகளில். நவீன தொழினுட்பம் அறிமுகப்படுத்தப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். பாதுக்கை, ஹோமாகம பிரதேசங்களுக்கு கடந்த (30) விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பல்வேறு இடங்களை பார்வையிட்ட பின்னர் பாதுக்க பிரதேச சபையில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலும் கலந்துகொண்டார். இங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அலங்கார மீன் உற்பத்தி மற்றும் நீர்த்தாவரத்துறையை

அபிவிருத்தி செய்வதில்,கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.



பிரதமரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இப் பகுதி மக்களுக்குள்ள சிக்கல்களை அவர் நன்றாக புரிந்து வைத்

துள்ளார்.பிரதமரின் ஆலோசனைக்கு அமைய இந்த பண்ணைகளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் உள்ளீர்ப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சு மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகரசபை

முனைப்புடன் செயற்படுகிறது. மேலும் மீன் உணவுகள் மற்றும் குளங்களில் பயன்படுத்துகின்ற உபகரணங்களின் விலையை குறைப்பதற்கும் பிரதமருடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பாதுக்க பிரதேசத்தில் தனியார் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் நீர்வாழ் தாவரங்கள் வளர்ப்பு போன்ற தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அவர்களின் தேவைகள் கடற்றொழில் அமைச்சினூடாக தீர்த்துவைக்கப்படவுள்ளன.

இங்கு தற்போது வழங்கப்படுகின்ற மீன் உணவுகளின் விலை அதிகமாக இருப்பதும், குளங்களில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களின் விலை அதிகரி

த்துள்ளமையும் இத்தொழிலைத் தொடர்வதில் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே,அரசாங்கம் இதில் தலையிட்டு,ஏதேனும் நிவாரணங்களை வழங்கவும் ஆலோசிக்கப்படுகிறது.

இத்துறையில், தனியார் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு அமைச்சு உதவுவது மட்டுமல்லாமல் புதிய முயற்சியாளர்களையும் ஊக்குவிக்கும் என்றார்.

அமைச்சரின் விஜயத்தின்போது அமைச்சின் செயலாளர் இந்து ரத்னாயக்க, நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், பிரதமரின் இணைப்புச் செயலாளர் உட்பட பலரும் பங்கேற்றனர்.

# டீசல் விலை 20 ரூபா குறைந்தால் மட்டுமே பஸ் கட்டணம் குறையும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



எரிபொருள் விலை குறைவடைந்துள்ள நிலையில் பஸ்கட்டணங்களை குறைப்பதானால், டீசல் லீற்றருக்கு மேலும் 20 ரூபாவால் குறைக்கப்பட வேண்டுமென தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விலை குறைப்போடு ஒப்பிடும்போது பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என்றும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, குறைக்கப்பட்ட எரிபொருள் விலைக்கு ஏற்ப, பஸ் கட்டணத்தை குறைக்க முடியுமா என்பது தொடர்பில், கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருவதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரெண்டா அது தொடர்பில் தெரிவிக்கையில், மேற்படி கணிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவுற்றதும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியுமா என்பது தொடர்பில் இறுதி தீர்மானம் அறிவிக்கப்படும் என்றார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, தற்போது குறைக்கப்பட்டுள்ள

06

# SJB க்கு எதிரான டயனாவின் மனு: ஜூன் 08இல் விசாரணை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தமது எம்.பி. பதவியை இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்டுள்ள தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கான உத்தரவொன்றை பிறப்பிக்கக் கோரி, இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தாக்கல் செய்துள்ள மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க எதிர்வரும் ஜூன் 08ஆம் திகதி இந்த மனுவை விசாரிப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. நேற்றைய தினம் நீதிபதிகளான பிரியந்த ஜனவர்தன, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அந்த மனு மீதான விசாரணையை ஜூன் (08) இல்,மேற்கொள்வதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

இராஜாங்க அமைச்சரான டயனா கமகே தனது மனுவில் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்ததாக குற்றம் சுமத்தி, பிரதிவாதிகள் தமக்கு எதிராக தமது எம்.பி.பதவியை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். எவ்வாறாயினும் அவர்கள் அவ்வாறான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு

06

# தேர்தலில் போட்டியிடவிருந்த அரச ஊழியர்களை மீண்டும் பணியில் அமர்த்த பரிந்துரை

உள்ளூராட்சித் தேர்தலில் (2023) போட்டியிடவிருந்த அரச உத்தியோகஸ்தர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பில் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தொகுதிக்கு வெளியே வேறு பகுதியில் தற்காலிகமாக பணிகளை ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அதன்படி, அவர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பொலன்னறுவை மாவட்ட கஷ்டப் பிரதேசங்களுக்கு புதிய பஸ் வண்டிகள்



நாட்டின் 75 வது சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு இணைந்ததாக,கிராமிய பாதைகளில் போக்குவரத்துக்காக 500 புதிய பஸ் வண்டிகளை இணைக்கும் இலங்கை போக்குவரத்து சபையின் திட்டத்தின் கீழ், பொலன்னறுவை மாவட்டத்துக்கு 15 பஸ் வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி

06

# ஷங்ரிலா மைதானத்தில் விசேட வெசாக் நிகழ்ச்சி ஜனாதிபதி பங்கேற்பு

புத்த ரஷ்மி தேசிய வெசாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, காலி முகத்திடல் ஷங்ரிலா பசுமை மைதானம் மற்றும் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் மே 03, 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் வெசாக் தோரணங்கள், வெசாக் கூடுகள், பக்திப் பாடல்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று (03) மாலை 7.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலக படிக்கட்டுகளுக்கு முன்பாக வண்ணமயமான பக்திப் பாடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பங்கேற்கவுள்ளார்.

நாளை 04 ஆம் திகதி அதே இடத்தில் பக்திப் பாடல் நிகழ்வும் நடைபெற உள்ளது.

நாளை மறுதினம் 05 ஆம் திகதி, ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேடையில் நாற்பது

06

# ஆதிவாசிகள் தலைவரின் ரிட் மனு: செப்டெம்பர் 8 இல் விசாரணை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தமது பாரம்பரிய நிலத்தை பாதுகாக்கும் வகையில் ஆதிவாசிகளின் தலைவர் ஊறுவரிகே வன்னிலா எத்தோவினால், தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட்மனு செப்டெம்பர் 08இல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதுகுறித்து,

மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ரம்பகென் ஓய பிரதேசத்திலுள்ள தமது பாரம்பரிய நிலத்தை, பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு மகாவலி அதிகாரசபை மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிராகவே ஆதிவாசிகளின்

தலைவர் மேற்படி ரிட்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

நேற்றைய தினம் மேற்படி மனு, யோகித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன்போதே அந்த மனுமீதான விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் எட்டில் மேற்கொள்வதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது. ஆதிவாசிகளின் தலைவர் தமது ரிட் மனுவில், ஆதிவாசிகளுக்கு சொந்தமான காணியில் சோளச் செய்கையை மேற்கொள்ள தனியார் நிறுவனத்துக்கு பெற்றுக் கொடுக்க மகாவலி அதிகார சபை தீர்மானித்துள்ளதாகவும் இதனால் தமது சமூகத்திற்கு பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தீர்மானத்தை இரத்து செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கக் கோரி அவர், தம் மனுவில் கேட்டுள்ளார்.

# நைஜீரியாவில் தடுத்து வைத்த கப்பல் எட்டு இலங்கையருடன் விடுவிப்பு

நைஜீரியா மற்றும் ஈக்குவடோரிலும் ஆகஸ்ட் 2022 முதல் கினியாவிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த M/T Heroic Idun கப்பல் ஏப்ரல் 28 அன்று போர்ட் ஹார்கோர்ட்டில் உள்ள நைஜீரியாவின் பெடரல் உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில், எட்டு இலங்கையரும் மாலுமிகளும் இருந்துள்ளனர். நைஜீரிய அதிகாரிகளுக்கும், கப்பல் உரிமையாளரான இடன் மரிடைம் லிமிடெட் நிறுவனத்துக்குமிடையே நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கப்பலின் நீதிமன்ற காவலை நிறுத்துவது மற்றும் குற்றச்சாட்டுகளை கைவிடுவது குறித்து உயர் நீதிமன்றம் முடிவு செய்தது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பலில் எட்டு இலங்கை பணியாளர் உட்பட 26 மாலுமிகள் இருந்தனர்.

06

# கிழக்கில் தீவிரமடையும் டெங்கு 04 மாதங்களில் 4,300 ஆக பதிவு

## மக்களுக்கு Dr.அருள்குமரன் எச்சரிக்கை



கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோயினால் ஏப்ரல் மாதம் மாத்திரம் இருவர் உயிரிழந்துள்ளனர். ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4,300 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ்.அருள்குமரன் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

06

# பொதுநல விடயங்களில் பொறுப்புடன் நடக்கும் முதிர்ச்சி ஐ.ம.சவிடம் இல்லை

(ஏ,ஜீ,எம்,தௌபீக்)



பொதுநல விடயங்கள், நாட்டின் நலன்களை தொடர்ந்தும் எதிர்க்கும் நிலையில் செயற்பட்டால், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்காலத்தில் வெறுமையடைந்துவிடுமென, மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் ஸாலி தெரிவித்தார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மீதான வாக்கெடுப்புக்கு பாராளுமன்ற உறுப்பினர் பௌஷி ஆதரவளித்தமை பற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுற்றி மேலும் குறிப்பிட்ட அவர்,

நாட்டு நலன் மற்றும் மக்களுக்கான விமோசன திட்டங்களில் எதிர்க்கட்சியும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

எடுத்ததற்கெல்லாம் எதிர்க்கும் மனநிலையில் செயற்படுவது முதிர்ந்த அரசியலல்ல. மக்கள் நலன், நாட்டு நலனில் சிரத்தையுடன் செயற்படுவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு. அதலபாதாளத்திலிருந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்கள் பெறப்பட்டன. இவை, மீளச்செலுத்தப்பட வேண்டியுள்ளது.இதற்காக கட்சி பேதங்களின்றி உழைத்து அந்நியச் செலாவணியை ஈட்ட வேண்டியுள்ளது.

பொருளாதர நிவாரணமாகக் கொண்டு வரப்பட்ட இந்தக் கடன் உடன்படிக்கைக்கு

06

# பெலாரஸ் பல்கலைக்கழகத்திலிருந்து இலங்கை மாணவன் சடலமாக மீட்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



பெலாரஸில் உள்ள மருத்துவ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 24 வயதுடைய இலங்கை மாணவர் விடுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். திஷான் குலரத்ன என்ற மாணவரே கடந்த (30) இல், சடலமாக மீட்கப்பட்டார்.

கண்டியிலுள்ள பிரதான ஆண்கள் பாடசாலையில் கல்வி கற்ற இம்மாணவன், உயிரியல் பிரிவில் சித்தியடைந்து வைத்தியராக வேண்டும் என்ற நோக்கத்தில் பெலாரசில் பல்கலைக்கழகத்தில் சேர்ந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் நான்காம் ஆண்டில் கல்வி கற்கும் இம்மாணவன், முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களில் சிறந்த மாணவருக்கான விருதினைப் பெற்றிருந்தார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 20ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 12

### குறள் தரும் சிந்தனை



குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து

மலை போன்றவர்களின் பெருமையைக் குலைப்பதற்கு நினைப்பவர்கள், நிலைத்த பெரும் செல்வமுடையவர்களாக இருப்பினும் அடியோடு அழிந்து போய் விடுவார்கள்.

## விழுமியம் பிறழாமல் பணிபுரிவது பத்திரிகைகளின் தலையாய பொறுப்பு

மே மாதம் 3 ஆம் திகதியான இன்று உலக பத்திரிகை சுதந்திர தினமாகும். இத்தினம் வருடா வருடம் வெவ்வேறு தொனிப்பொருளில் உலகெங்கிலும் அனுஷ்டிக்கப் படுகிறது. அந்த வகையில் இவ்வருட உலக பத்திரிகை சுதந்திர தினத்தின் தொனிப்பொருளாக, 'உரிமைகளின் எதிர்காலத்தை வடிவமைத்தல்_ ஏனைய அனைத்து மனித உரிமைகளதும் இயக்கியாக கருத்து சுதந்திரம்' என்பது கொள்ளப்பட்டுள்ளது.

பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்த்தும் விதத்தில் உலகின் பல்வேறு நாடுகளிலும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அதிலும் குறிப்பாக இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டு இவ்வருடத்துடன் முப்பது வருடங்கள் நிறைவடைகின்றன. அதன் பொருட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் விஷேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக பத்திரிகை சுதந்திர தினமானது எடுத்த எடுப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தினமல்ல. இத்தினத்திற்கு ஒரு அடிப்படையும் பின்புலமும் இருக்கவே செய்கின்றன. அதாவது ஆபிரிக்கப் பத்திரிகைகள் 1991 இல் இதே நாளில் பத்திரிகைகள் சுதந்திர சாசனத்தை முன்வைத்தன. அச்சாசனம் குறித்து யுனெஸ்கோ அமைப்பு கவனம் செலுத்தியது. இவ்வாறான பின்புலத்தில் 1993 இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய ஒவ்வொரு வருடமும் மே மாதம் 3 ஆம் திகதியை உலக பத்திரிகை தினமாக அனுஷ்டிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு இத்தினத்தில் யுனெஸ்கோ/ கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருதை யுனெஸ்கோ நிறுவனமே வழங்கிக் கௌரவிக்கிறது. கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவர் 1986 டிசம்பர் 17 இல் அவரது அலுவலகத்திற்கு முன்பாக படுகொலை செய்யப்பட்டார். அதன் நினைவாகவே இவ்விருது வழங்கப்படுகிறது.

கடந்த முப்பது வருட காலப்பகுதியில் இத்தினம் வெவ்வேறு தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு, பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம், அதன் சிறப்பு, அச்சுதந்திரத்தைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதன் அவசியம் என்பன தொடர்பில் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பத்திரிகையானது உலகில் நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. வெகுஜன ஊடகத்துறையில் இது ஒரு பிரதான துறையாக ஆரம்ப காலம் முதல் விளங்கி வருகின்றது. குறிப்பாக அச்சு ஊடகத் துறையாக விளங்கும் பத்திரிகைத் துறையானது மனிதனின் அறிவியல் உள்ளிட்ட அனைத்து துறைகளதும் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகின்றது.

பத்திரிகைத்துறை உலகில் செலுத்தி வருகின்ற செல்வாக்கில் இலத்திரனியல் ஊடகங்களது வருகை தாக்கங்கள் செலுத்தியுள்ள போதிலும், பத்திரிகைகள் மக்கள் மத்தியில் செலுத்தும் தம் செல்வாக்கை இழந்து விடவில்லை. உலகில் ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பின்பற்றும் அனைத்து நாடுகளிலும் பத்திரிகைச் சுதந்திரம் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. அனைத்து ஜனநாயக நாடுகளும் இச்சுதந்திரத்தை உறுதிப்படுத்தியும் உள்ளன. ஜனநாயகத்தின் நாலாவது தூணாக விளங்கிக் கொண்டிருக்கிறது பத்திரிகைச் சுதந்திரம்.

அந்த வகையில் இலங்கையிலும் பத்திரிகைச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு இந்நாட்டு பத்திரிகைகளே நல்ல எடுத்துக்காட்டுக்களாக உள்ளன. குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களையும், அழுத்தங்களையும் மாத்திரமல்லாமல், பாதிப்புகளையும் கூட இந்நாட்டுப் பத்திரிகைகள் அப்படியே வெளியிட்டன. அதேநேரம் சில பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஊதிப்பெருப்பிக்கவும் தவறவில்லை. அவ்வாறான செய்திகள், தகவல்களால் மக்கள் தவறாக வழிகளில் இட்டுச் செல்லப்பட்டுமுள்ளனர்.

அதன் விளைவாகவே பத்திரிகைகள் தம் சுதந்திரத்தைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அது புத்திஜீவிகளதும் சமூக ஆர்வலர்களதும் கருத்தாக உள்ளது. மக்களுக்கு வழங்கும் செய்திகளும் தரவுகளும் உறுதிப்படுத்தப்பட்டவையாகவும் பக்கச் சார்பற்றவையாகவும் இருப்பது அவசியம். அவற்றை மக்களுக்கு வழங்க முன்னர் அவை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

அதேநேரம் எவரது தனிப்பட்ட உரிமையையும் பாதிக்கக்கூடிய வகையில் பத்திரிகைச் சுதந்திரம் பயன்படுத்தப்படலாகாது. அதற்கு பத்திரிகைச் சுதந்திரம் இடமளிக்கவும் இல்லை. இவை இவ்வாறிருக்க, செய்திகளுக்கும் தகவல்களுக்கும் மூலமாக சமூக ஊடகங்களை கொள்ளவும் முடியாது. செய்திகளை சரிபார்ப்பதிலும், உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் சமூக ஊடகங்கள் அக்கறைப்படுவதில்லை. இது சமூக ஊடகங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் பிரதான விமர்சனங்களில் ஒன்றாகும்.

சமூக ஊடகங்களின் வருகை பத்திரிகைத் துறையில் தாக்கம் செலுத்தி இருந்தாலும், தாம் பெற்றுக்கொண்டுள்ள உரிமைகளும் சுதந்திரமும் துஷ்பிரயோகப்படுத்தப்படும் வகையில் அவற்றைப் பயன்படுத்த பத்திரிகைகள் துணை போகக் கூடாது. ஆகவே ஒவ்வொரு பத்திரிகையும் தம் பொறுப்புணர்வை உணர்ந்து செயற்படுவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# உலகில் ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கான நான்காவது தூணாக விளங்கும் பத்திரிகைகள்




## உலக பத்திரிகை சுதந்திர தினம் இன்று அனுஷ்டிப்பு

உலக பத்திரிகை சுதந்திர தினம் மேமாதம் 3 ஆம் திகதி (இன்று) உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகின்றது. பத்திரிகை நிறுவனங்கள் அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துகளை சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தலும் தடைகளுமின்றி உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளியிடுவது பத்திரிகை சுதந்திரம் என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

உலக பத்திரிகை சுதந்திர தினமானது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும், 'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் சபையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் திகதியன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய தினத்தில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனத்தினர் 'யுனெஸ்கோ ஃகிலெர்மோ கானோ' உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர்.

இவ்விருது கொலம்பிய பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவரின் நினவாக வழங்கப்பட்டு வருகிறது. இவர் 1986ஆம் ஆண்டு டிசம்பர் 17 இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.

யுனெஸ்கோவின் பொதுமாநாட்டின் பரிந்துரையைத் தொடர்ந்து ஐ.நா பொதுச் சபையால் 1993 டிசம்பரில் உலக பத்திரிகை சுதந்திர தினம் அறிவிக்கப்பட்டது.

ஜனநாயகம் தழைக்க நான்கு தூண்கள் வலுவாக இருக்க வேண்டியது அவசியம். அதில் நான்காவது தூணாக ஊடகங்கள் விளங்குகின்றன. பத்திரிகை சுதந்திரம் குறித்து பன்னாட்டு மன்றத்தில் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியதன் காரணமாகவே ஐ.நா சபை 1993 ஆம் ஆண்டு முதல் மே மாதம் 3 ஆம் திகதியை உலக பத்திரிகை சுதந்திர தினமாக கொண்டாடி வருகிறது.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல், பத்திரிகைகளின் சுதந்திரத்தை பாதுகாப்பது, பத்திரிகையாளர்களின் உரிமைகளை பாதுகாப்பது போன்ற நோக்கங்களுக்காக இந்தத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகின் வல்லரசுகள் நாங்கள்தான் என்று மார்தட்டும் நாடுகள் கூட பத்திரிகையாளர்களை சுதந்திரமாக வாழ விடுவதில்லை என்ற குற்றச்சாட்டு நெடுங்காலமாக நிலவி வருகின்றது.

உலகம் முழுவதுமே பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் பரவலாக நடந்துள்ளன. பெண் பத்திரிகையாளர்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளான சம்பவங்கள் பல நாடுகளில் நடந்துள்ளன. பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சம்பவங்களும் பல நடுகளில் நடந்துள்ளன.

பத்திரிகையாளர்கள் தங்களது பொறுப்புகளை உரியபடி உணர்ந்து கொண்டு பணியாற்றுவதும் அவசியமாகின்றது. அதேசமயம் பத்திரிகையாளர்களின் பொறுப்புகள் தொடர்பாக அரசாங்கங்கள் தமது கடமைமைய செவ்வனே செய்வதும் அவசியமாகின்றது.

இந்த ஆண்டின் கருப்பொருள், 'உரிமைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பது: மற்றைய அனைத்து மனித உரிமைகளுக்கும் ஒரு இயக்கியாக கருத்துச் சுதந்திரம்' என்பதாகும். யுனெஸ்கோவின் கூற்றுப்படி, இது மற்றைய அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிக்கவும் பாதுகாக்கவும் கருத்துச் சுதந்திரத்தின் கூறுகளை குறிக்கிறது.

தவறான தகவல், வெறுப்பு பேச்சு, அதிகப்படியான உள்ளடக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் மோசமான வெளிப்படைத்தன்மை நமது காலத்தின் மிகப்பெரிய தகவல் சவால்களை சமாளிக்க ஒரு சுயாதீனமான பத்திரிகை மற்றும் ஊடக அறிவுள்ள பொதுமக்கள் அவசியம்.


பத்திரிகை மற்றும் ஊடக கல்வியறிவுக்கான ஆரோக்கியமான சூழலை வளர்ப்பது கருத்துச் சுதந்திரம் மற்றும் பிற மனித உரிமைகளை இயக்குகிறது. மேலும் அவர்களின் பரஸ்பர வலுவூட்டலை ஆதரிக்கிறது. இதன் பொருள் ஊடகங்கள் முக்கிய உரிமைகளை அனுபவிக்கின்றன, ஆனால் இந்த உரிமைகளை ஆதரிக்கவும் மேம்படுத்தவும் பொறுப்புகள் உள்ளன என்பதாகும்.

# மலையக சமூகத்தின் 200 வருட அனுபவங்களை மீட்டிப் பார்க்கும் ஐம்பது மாத தொடர் ஆய்வரங்கம்

பிரித்தானிய காலனித்துவ காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட மக்கள் இலங்கையில் பலவாழ்வியல் அனுபவங்களோடு தங்கள் இருப்பை இருநூறு வருடகாலம் நிலைநிறுத்தியுள்ள நிலையில் (1823 – 2023), அந்த அனுபவங்களை மீட்டிப் பார்க்கின்ற தருணமாக இக்காலகட்டம் விளங்குகிறது.

மலையக சமூகத்தின் வரவு, உழைப்பு, வாழ்வு அனுபவங்களை மீட்டிப் பார்க்கும் வகையிலான தொடர் ஆய்வரங்க செயற்பாட்டை நிகர் சமூக கலை இலக்கியஅரங்கம் இணையவழியில் இம்மாதம் மேமாதம்) தொடக்கம் தொடர்ந்து ஐம்பது மாதங்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளது. சமூக, பொருளாதார, கலை, இலக்கிய, கல்வி, விளையாட்டுத்துறை, அரசியல் அனுபவங்களை ஆய்வுரீதியிலான அணுகுமுறைகளுடனான கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதோடு, அதனை முறையாக ஆவணப்படுத்தும் நோக்கத்தையும் அந்த அமைப்பு கொண்டுள்ளது.

குறித்ததொரு விடயம் தொடர்பாக மாதமொன்றில் இரண்டுஆய்வரங்குகள் நிபுணத்துவம் வாய்ந்த ஆளுமைகளின் தலைமையில் இடம்பெறும்.



புலமை வாய்ந்த ஆய்வாளர்களையும், இத்துறையில் வளரமுனையும் ஈடுபாட்டாளர்களையும் இணைத்துக் கொண்ட வகையில் ஆய்வரங்குகள் ஏற்பாடு செய்யப்படும்.

மலையகத்தோடு தொடர்புபட்ட சகல துறையினரும் இக்கலந்துரையாடலில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இதன் மூலம் மலையக சமூகத்தின் அடுத்தகட்ட நகர்வுக்கான முன்மொழிவுகளை விதந்துரைக்கும் களமாக அமையப் பெறும்.

**அ. லெட்சுமணன்**
(ஆசிரியர்–நிகர் சஞ்சிகை)
பிரதான அமைப்பாளர்,
நிகர் சமூக, கலை இலக்கிய அரங்கம்

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் எஸ்-லோன் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கையின் நீர் முகாமைத்துவ சேவை வழங்குநர்களின் முன்னோடியாகத் திகழும் எஸ்லோன் தனியார் நிறுவனம், இலங்கையின் நீர் கட்டமைப்பு துறையின் (ப்ளம்பிங் தொழில்துறை) தரத்தை முன்னேற்றம் மற்றும் நீர்க்குழாய் பொருத்துனர்களின் (ப்ளம்பர்களின்) தொழில்ரீதியான வினைத்திறனை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

நவீன நீர்க்குழாய் தொழில்துறையின் தரத்தினை ஸ்தாபித்து, அதனை மேம்படுத்துவது மற்றும் இத்தொழிற்துறையின் உயிர்நாடியாக விளங்கும் நீர்க்குழாய் பொருத்துனர்களின் தொழில்திறனை முன்னேற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2001 ஆண்டு ஒக்டோபர் மாதம் எஸ்லோன் தனியார் நிறுவனம் நீர்க்குழாய் பொருத்துனர் கழகம் எனப்படும் குழாய் பொருத்துனர்களுக்கான பிரத்தியேக அமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டது.




எஸ்லோன் தனியார் நிறுவனத்தினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழில்திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் நடைமுறை நிகழ்ச்சிகள் ஊடாக நாடளாவிய ரீதியில் பெரும்பாலான நீர்க்குழாய் பொருத்துனர்கள் பயனடைந்து வருகின்றனர். இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீர்க்குழாய் பொருத்துனர்களின் தொடர்ச்சியான ஆதரவினை வழங்கி வரும் எஸ்லோன் தனியார் நிறுவனம், 8,000 இற்க்கும் மேற்பட்ட நீர்க்குழாய் பொருத்துனர்களை அங்கத்துவர்களாக கொண்ட வலுவான வலையமைப்பை தன்னகத்தே கொண்டுள்ளது.

குழாய் அமைப்பு பணிகளை தொழிற்திறனுடன் முறையாக கையாளுதல், குழாய் அமைப்பினை முறையாக நிறுவுதல் மற்றும் உரிய முறையிலான திருத்தப்பணிகள் தொடர்பில் நீர்க்குழாய் பொருத்துனர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழில்முறை கல்வி போன்றவற்றை மேம்படுத்துவதே எஸ்லோன் தனியார் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களின் முக்கிய நோக்கங்களாகும்.

நுவரெலியாவில் கைச்சாத்திடப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மற்றும் கெப்பிட்டல் மஹாராஜா குழுமத்தின் குழுமப் பணிப்பாளர்/ பிரதம செயற்பாட்டு அதிகாரியான எஸ்.சி.வீரசேகர ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# செலான் வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமனம்

செலான் வங்கியின் புதிய பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2023 மே 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் பிரதம நிதி அதிகாரியாக செலான் வங்கியுடன் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து, 2016 ஆம் ஆண்டில் பிரதம இடர் அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டதுடன், 2018 முதல் 2019 வரையான காலப்பகுதி வரை கூட்டாண்மை வங்கியியல் செயற்பாடுகளுக்கான பிரதி பொதுமுகாமையாளராக செயலாற்றியிருந்தார். 2020 ஜனவரி மாதம் இவருக்கு சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன், அடுத்த ஆண்டில், பிரதம செயற்பாட்டு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றிருந்தார். 2012 நவம்பர் மாதம் முதல், செலான் டிவலப்மன்ட் பி.எல்.சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் ரமேஷ் திகழ்கின்றார்.

பல வருடங்களாக செலான் வங்கியின் தலைமைத்துவ அணியில் ரமேஷ் அங்கம் வகிப்பதுடன், இந்த புதிய பதவிக்கு அவசியமான பெருமளவு அனுபவங்களையும் அறிவையும் தம்வசம் கொண்டுள்ளார். கடந்த காலங்களில், செலான் வங்கியில் ரமேஷ் பெருமளவு அனுபவங்களைப் பெற்றுள்ளதுடன், வங்கிக்கு தலைமைத்துவமளிப்பதற்கான பெருமளவு திறனையும் தன்வசம் கொண்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து முதல் வகுப்பில் சிறப்புப் பட்டத்தை ரமேஷ் கொண்டுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை அங்கத்தவர் என்பதுடன், ஐக்கிய இராச்சிஜிய – சந்தைப்படுத்தல் பட்டய நிறுவகம், ஐக்கிய இராஜ்ஜியத்தின் பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சம்மேளனம் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் போன்றவற்றில் அங்கத்துவத்தையும் கொண்டுள்ளார்.



சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் மிகச் சிறப்பாக செயலாற்றியிருந்த கபில ஆரியரட்னவிடமிருந்து பிரதம நிறைவேற்று அதிகாரி பொறுப்பை ரமேஷ் பெற்றுக் கொள்வார்.

# யாழ் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைபீட மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை பீட மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம் ஒன்று தொடர்பாக துணைவேந்தரையும் கலைப்பீடாதிபதியையும் 'கனடா உதயன்' பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இரண்டு நாட்களாக யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ள கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், யாழ் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைபீடத்தின் மாணவர்களுக்கான புலமைப் பரிசுத்திட்டம் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

பல்கலைக்கழகத்தின் 'கவுன்சில்' கூட்டத்தின் பின்னர் கனடா உதயன் குழுவினரைச் சந்தித்த துணைவேந்தரும் கலைப்பீடாதிபதியும் கனேடியத் தமிழர்களின் செய ற்பாடுகள் பற்றியும் கலை, கல்வி மற்றும் கலாசார செயற்பாடுகள் பற்றியும் கேட்டறிந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஏற்கனவே உரையாடித் தீர்மானித்த புலமைப் பரிசுத் திட்டம் தொடர்பான பத்திரங்களை உதயன் பிரதம ஆசிரியர் இருவரிடமும் கையளித்தார். இத்திட்டத்தின் பயனாளிகளை இன்னும் சில வாரங்களில் தெரிவு செய்து அவர்கள் பயன்பெறும் வகையில் செயற்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.





துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆகியோருடன் 'கனடா உதயன்' பிரதம ஆசிரியர் சந்திப்பு

கனடா உதயன் நிறுவனமும் றொறன்ரோ மனித குரல் அமைப்பும் இணைந்து இந்தத் திட்டத்திற்கான ஒரு மில்லியன் இலங்கை ரூபாவை வழங்குகின்றன. கனடாவாழ் சமூகநலன் கொண்ட அன்பர்களான வர்த்தகப் பிரமுகர்கள் சாந்தா பஞ்சலிங்கம், சங்கர் நல்லதம்பி, நிமால் விநாயகமூர்த்தி, கணேசன் சுகுமார், திருமதி சசிகலா நரேன் உட்பட மேலும் சிலர் இந்த புலமைப் பரிசுத் திட்டத்திற்கு பங்களித்துள்ளனர்.



இந்தச் சந்திப்பின் போது ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும், யாழ் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞாத்துறைப் பட்டதாரியுமான லோகன் கணபதி வழங்கிய மாகாண அரசின் வாழ்த்துப் பத்திரங்களையும் உதயன் பிரதம ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் ஆகியோருக்கு வழங்கினார். அதற்காக துணைவேந்தர் நன்றி தெரிவித்தார்.

# இலங்கை–இந்திய சமய, கலாசார உறவுப்பாலமாக விளங்கும் சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம்

நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் மிகவும் நெருக்கமான உறவுப் பாலமாக தற்பொழுது விளங்குகின்றது. கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் சிறிய ஆலயமாக இருந்த சீதையம்மன் ஆலயம் இராதாகிருஷ்ணன் எம்.பியின் தலைமையில் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது இந்தியாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கியமான ஆலயமாக நுவரெலியா சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயம் விளங்குகின்றது. இந்த ஆலயத்திற்கு அருகில் தியான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அத்தோடு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இந்த ஆலயத்தின் ஞாபகார்த்த முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. புனித நீர்த்தடாகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திப் பணிகளுக்காக ஒத்துழைப்பு வழங்கிய நுவரெலியா ரோட்டரி கழகம், டெல்லி ரோட்டரி கழகம் மற்றும் தியான மண்டபத்திற்கான அனுசரணை வழங்கிய டெல்லியைச் சேர்ந்த ஜெயின் குப்தா குடும்பத்தினருக்கும் ஆலய நிர்வாக சபை சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலய நிர்வாக சபையின் தலைவராக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் பணியாற்றி வருகின்றார்.





அண்மையில் அங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்து கொண்டிருந்தார். சிறப்பு அதிதிகளாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, கண்டி இந்திய உதவி தூதுவர் கலாநிதி திருமதி எஸ். ஆதிரா, பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. பீ.ரட்னாயக்க, யதாமினி குணவர்தன, முன்னாள் பிரதியமைச்சர் வடிவேல் புத்திரசிகாமணி, நுவரெலியா மாநகர முன்னாள் முதல்வர் மஹிந்த தொடம்பே, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட மற்றும் நுவரெலியா ரோட்டரி கழகத்தினர், இந்தியாவின் டெல்லி ரோட்டரி கழகத்தினர், ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



அங்கு இராதாகிருஷ்ணன் எம்.பி உரையாற்றுகையில்,

“இந்த ஆலயத்தை எமது நிர்வாக சபையினர் பொறுப்பேற்று ஆலயத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்த பொழுது, சீத்தாஎலிய பிரதேசத்திலுள்ள இன, மதவாதிகள் இந்த ஆலயத்திற்கு செல்லும் வழியில் கறுப்பு கொடிகளை கட்டி எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அந்த நேரத்தில் அமைச்சராக இருந்த மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமான், அன்று நுவரெலியா அரசாங்க அதிபராக இருந்த டட்லி திஸாநாயக்க, சீத்தாஎலிய பௌத்த ஆலயத்தில் மத குருவாக இருந்த தம்மானந்த தேரர் உட்பட பலர் இந்த ஆலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளித்தார்கள். அதனாலேயே இன்றும் இந்த ஆலயத்தை அபிவித்தி செய்ய முடிகின்றது.

இந்தியாவிலிருந்து மொராயல் பாபு என்பவர் 500 பேருடன் இந்த ஆலயத்திற்கு வருகை தந்து இராமர் கதையை பிரபல்யப்படுத்தினார். அதன் பின்னர் இந்தியாவிலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளும் இராமர் பக்தர்களும் வரத் தொடங்கினார்கள். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஒரு உறவுப் பாலமாக இந்த ஆலயம் திகழத் தொடங்கியது. இந்த ஆலயத்தில் மேலும் அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு இந்தியாவிலுள்ள இராமர் பக்தர்கள் முன்வந்துள்ளார்கள்.அதற்கு இந்திய உயர்ஸ்தானிகர் உதவி செய்ய வேண்டும்.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது முதலில் இந்திய அரசாங்கம்தான் உதவி செய்தது. இதனை மறக்க முடியாது. இந்து சமயத்திற்கும் பௌத்த சமயத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன. முதன்முதலில் பௌத்த சமயம் இந்தியாவில்தான் உருவாகியது. இராமாயணம் என்பது இலங்கையில் வாழும் சிங்கள மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள வரலாறு ஆகும்” என்று தெரிவித்தார்.

**எஸ். தியாகு...**
(நுவரெலியா தினகரன் நிருபர்)

# எத்தகைய சவால்கள் வந்தாலும் அயல்நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் இந்தியா தயங்குவதில்லை!

கொரோனா சவாலாக இருந்தாலும் சரி அல்லது கடன் அழுத்தங்களாக இருந்தாலும் சரி, இந்தியா எப்போதும் தனது அண்டை நாடுகளுக்காக உதவியுள்ளது. அயல்நாடான இலங்கை பொருளாதாரப் பாதிப்புக்குச் சென்ற போது இந்தியா 4 பில்லியன் டொலர் கொடுத்து உதவியது என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

“தெற்காசியாவைத் தாண்டி இந்தியா அனைத்து திசைகளிலும் நாடுகளுடன் உறவை உருவாக்கி வருகிறது. இது இந்தியாவுடனான ஆழமான ஈடுபாட்டுக்கான பாதையைத் திறந்துள்ளது. குவாட் அமைப்பின் மூலமும் பல துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக வளைகுடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் இந்தியாவின் உறவு மிகச்சிறப்பாக இருக்கிறது. இந்தியா, இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய I2U2 என்ற புதிய கூட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். இது இந்தியாவின் முக்கிய வர்த்தக மற்றும் முதலீட்டு மையங்களாக உருவெடுத்துள்ளன” என்று ஜெய்சங்கர் மேலும் தெரிவித்தார்.



இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கரீபியன் நாடுகளில் ஒன்றான டொமினிக்கன் குடியரசு நாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு நிகழ்ச்சி ஒன்றில் பேசிய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், உலக நாடுகளுடன் இந்தியா கொண்டிருக்கும் உறவு குறித்துப் பேசினார்.

## 'இலங்கைக்கும் அவ்வாறே உதவியளித்தோம்'

"அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, ஜப்பான் என எந்த நாடாக இருந்தாலும் இந்தியாவின் உறவு நன்றாகவே இருக்கும். அதேநேரம் இதை நாம் சீனாவுடன் ஒப்பிட முடியாது. சீனாவுடனான உறவு வேறு மாதிரி இருக்கும். 2015 இல், பிரதமர் நரேந்திர மோடி, இந்தியப் பெருங்கடல் மற்றும் அங்குள்ள தீவுகள் என அனைத்தையும் கொண்ட ஒரு விரிவான பார்வையை வெளிப்படுத்தினார்.

அதன்பிறகு இந்தோபசிபிக் பகுதியில் இந்தியாவும் மத்திய ஆசியாவுடன் மிகவும் திறம்பட இணைக்கும் ஒரு திட்டத்தைப் பின்பற்றி வருகிறது. இது பல வழிகளில் இந்தியாவுக்கு உதவியுள்ளது.

சீன எல்லையான உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் அவர்களின் நடவடிக்கை எல்லை ஒப்பந்தங்களை மீறுவதாகவே இருக்கிறது. ஒரே காலகட்டத்தில் சீனா மற்றும் இந்தியாவின் எழுச்சி என்பது இரு தரப்பிற்கும் இடையே போட்டி அம்சங்கள் இல்லாமல் இல்லை. இந்தியாவின் முக்கியமான முன்னுரிமைகள் என்பது அண்டை நாடுகள்தான். பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் இதையேதான் நாங்கள் செய்துள்ளோம். கடந்த 10 ஆண்டுகளாக இதுதான் நமது பிராந்திய நாடுகளுடனான கொள்கையாகும்” என்றார் ஜெய்சங்கர்.

# ஜீலான் மத்திய கல்லூரியின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் முன்னாள் மாணவரின் முன்மாதிரிப் பணி

தாங்கள் கல்வி கற்ற கல்லூரியின் நீண்டகாலக் குறைபாட்டை ரூபா பன்னிரண்டு இலட்சம் செலவில் நிவர்த்தி செய்து கொடுத்தது மட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்கும் பரிசு வழங்கி கௌரவித்தது மகிழ்ச்சிக்குரிய செயலாகும். பாணந்துறை ஜீலான் கல்லூரியின் கருத்தரங்கு மண்டபத்திற்குத் தேவையான 100 விரிவுரை மண்டபக் கதிரைகளை (சுமார் 12 இலட்சம் ரூபா) மாணவர் குழாம் கையளித்து தாங்கள் கல்வி கற்ற கல்லூரியின் நீண்ட கால குறையை நிவர்த்தித்திருந்தமை பலரதும் பாராட்டுக்குள்ளாகியிருந்தது. இக்கதிரைகளை கையளிக்கும் வைபவம் அண்மையில் கல்லூரி அதிபர் ஹலீம் மஜீத் தலைமையில் குறித்த கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கு மண்டபத்தில் கருத்தரங்குகளும் ஏனைய வைபவங்களும் நடைபெறும் போது கதிரைகளை வாடகைக்கு பெற்றே நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



இம்மாணவர் குழாம் படிக்கும் காலத்தில் இவர்களுக்கு தரம் 1 முதல் 13 ஆம் வகுப்பு வரை கற்பித்த ஆசிரியர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். தமக்கு கற்றபித்த ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னங்களோடு, பரிசுப்பொருட்களும் வழங்கி அம்மாணவர்கள் கௌரவித்தனர்.

ஜீலான் மத்திய கல்லூரியில் கல்விகற்ற மாணவர்கள் கல்லூரியின் தேவைகளை இனம் கண்டு உதவித் திட்டங்களை நிறைவேற்றி வருவதனால் கல்லூரி நல்ல முன்னேற்றம் கண்டு வருவதாகவும் இது ஏனையோருக்கு நல்ல முன்மாதிரியாகும் என்றும் கல்லூரி அதிபர் ஹலீம் மஜீத் தினகரனுக்குத் தெரிவித்தார். ஜீலானில் கல்விகற்று 1999 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் மற்றும் 2002 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவ, மாணவியினர் இக்குழாமில் அங்கம் வகிப்பதாக குழாமின் தலைவர் ஏ.ஸீ.எம்.இம்தாத் தெரிவித்தார்.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுள் நம் நாட்டில் தொழில் புரிபவர்களும், இவர்களுடன் கற்று தற்பொழுது வெளிநாடுகளில் தொழில் புரியும் நண்பர்களுடன் விசேடமாக தம்மோடு கல்வி கற்ற மாணவிகளின் கணவன்மார் இதற்கு பெரும் பங்களிப்பு செய்ததாக இக்குழாமின் செயலாளர் பஸ்லத் அஸ்வர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் கல்லூரியின் உபஅதிபர்களான எம்.எஸ்.எம்.சல்மான், யஸ்மின் (நளீமி), ஜீலானின் முன்னாள் அதிபர் எஸ்.எச்.எம். நௌபல் மற்றும் ஜஸ்மின் ஆசிரியர், மகளிர் பிரிவின் பொறுப்பாசிரியை ஏ.ஆர்.என். ஹஸனா,கல்லூரியின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.



**எம்.கே.எம்.அஸ்வர்...**
(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

# முன்னாள் எம்.பி. சல்மானின் மறைவு நிரப்ப முடியாத இடைவெளி

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்



முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சியில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் எம்எச் எம் சல்மானின் இழப்பு நிரப்ப முடியாத இடைவெளியை தோற்றுவித்துள்ளதாக கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆன்னாரது மறைவையிட்டு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அனுதாப செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது மறைந்த ஸ்தாபகத் தலைவர்எம்எச்எம்.அஷ்ரப்ஸ் ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தோற்றுவித்ததை தொடர்ந்து அவரது நம்பிக்கைக்குரியவராக பெரிதும் மதிக்கப்பட்ட எம்எச் எம். சல்மான், தலைவர் கல்முனையிலிருந்து, அன்றைய ஆபத்தான சூழ்நிலையில் கொழும்பிற்கு இடம்பெயர்ந்ததையடுத்து, சட்டத்துறையிலும், ஏனைய விடயங்களிலும் அவருக்கு பக்கபலமாக இருந்து வந்தார். அரசியல் மற்றும் சட்ட பிரச்சினைகளை தலைதூக்கிய போதெல்லாம் மறைந்த தலைவருக்கும், எனக்கும் அவ்வப்போது உரிய ஆலோசனைகளை அவர் வழங்கியதோடு, அவற்றுக்கு அவசியமான ஆவணங்களையும் தயாரித்தளித்து உதவினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 1989 ஆம் ஆண்டு முதல் முறையாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முன்வந்த போது, கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதிலும் அவர் பெரும்பங்காற்றினார்.

1994ஆம் ஆண்டு எமது மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அமைச்சராக இருக்கும்போது புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவராக சல்மான் நியமிக்கப்பட்டார்.

நான் அமைச்சுப் பதவிகளை வகித்த காலங்களிலும் வர்த்தக நியாய ஆணைக் குழுவின் தலைவராகவும், இலங்கை துறைமுக அதிகார சபை பிரதி தலைவர் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் பிரதி தலைவராகவும், மற்றும் சில அமைச்சுப் பதவிகளிலும் அவரை நியமித்திருந்தேன்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் மாசிக ரெங்கும எனும் இசை நிகழ்ச்சி (2) செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஐந்து பாடக பாடகிகளுக்கு பரிசுகள் வழங்கியதை படத்தில் காணலாம் ...

## நாட்டில் மக்கள் தொகையை...

தொகை சுமார் இரண்டு கோடியே இருபத்துதொரு இலட்சத்து எண்பத்தாயிரமாக உள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2022 ஆண்டு அறிக்கையின்படி, நாட்டில் நூறு (100) பேருக்கு 12 என்ற வீதத்தில் நிலையான தொலைபேசிகள் பாவனையில் உள்ளன. கையடக்க தொலைபேசிகள் 100 பேருக்கு 142 என்ற வீதத்தில் பாவனையில் உள்ளதாகவும் அந்த தெரிவிக்கப்படுகின்றது.

இணைய வசதிகள் நூறு பேருக்கு 97.7. என்ற அடிப்படையிலுள்ளது . கடந்த ஆண்டு (2022) டிஜிட்டல் தர வாழ்க்கைச் சுட்டெண்ணின் படி, இலங்கை 117 நாடுகளில் 89 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## உலக பத்திரிகை சுதந்திர...

விலக்கணப்படுத்தப்படுகின்றது. உலக பத்திரிகை சுதந்திர தினமானது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும், 'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் சபையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று அனுஷ்டிக்கப்படுவது 30 ஆவது வருட உலக பத்திரிகை சுதந்திர தினமாகும். பத்திரிகையாளர்கள் தங்களது பொறுப்புகளை உரியபடி உணர்ந்து கொண்டு பணியாற்றுவது மாத்திரமன்றி, பத்திரிகையாளர்களின் பொறுப்புகள் தொடர்பாக அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் தமது கடமைமைய செவ்வனே செய்வதும் அவசியமாகின்றது.

## அருண் மணிலால்...

கோலாப்பூரில் நேற்று உடல்நலக்குறைவால் தனது 89 ஆவது வயதில் காலமானார். அவரின் மறைவுக்கு பல்வேறு தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். காந்தியின் மகனான மணிலால் காந்திக்கு பிறந்தவர் அருண் மணிலால் காந்தி என்பது குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் 14, 1934ல் மணிலால் காந்தி மற்றும் சுசீலா மஷ்ருவாலா ஆகியோருக்குப் பிறந்த அருண் காந்தி, ஒரு ஆர்வலராக தனது தாத்தாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். எனினும் `தனது தாத்தாவின் துறவு வாழ்க்கை முறையைத் தவிர்த்துவிட்டார். அவர் 2017 இல், அவர் The Gift of Anger: And Other Lessons From My Grandfather Mahatma Gandhi ஆகிய புத்தகங்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு துறைமுக பகுதியில்...

அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு துறைமுகத்தின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே, இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் புளூமெண்டல் பகுதியை சேர்ந்த சிலரே காயமடைந்துள்ளனர். இவர்களில் 05 ஆண்களும் 03 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தின் ஆறாவது நுழைவாயிலுக்கு அருகில் உள்ள துறைமுகத்தில், இரும்பு திருட வந்த இருவரை தடுக்க முற்பட்ட வேளை, அங்கு வந்த சிலரால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்போது தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து துப்பாக்கியைப் பறிக்கச் சென்ற நபர் மீது, மற்றுமொரு தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பயிற்சிகளுக்காக சென்ற...

சுகாதாரத்துறையில் மேலதிக பயிற்சிகளுக்காக டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புவது வழக்கம்.

அவ்வாறு பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள 400 மருத்துவர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை. அத்துடன் இந்த வருடத்தில் மாத்திரம் இப்பயிற்சிகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றிருந்த 67 விசேட மருத்துவ நிபுணர்களும் இதுவரை மீண்டும் நாடு திரும்பவில்லை. குறிப்பாக சுகாதார அமைச்சுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்ட பின்னரே, மருத்துவர்கள் பயிற்சிகளுக்காக வெளிநாடு செல்கின்றனர்.

அவ்வாறு கடந்த காலங்களில் உடன்படிக்கைகளை மேற்கொண்டு வெளிநாடுகளுக்கு சென்றுள்ள விசேட மருத்துவ நிபுணர்கள் பெரும்பாலானோர், மீண்டும் நாட்டுக்கு திரும்பாததால் சுகாதாரத்துறையில் சிக்கல் தோன்றுவதாக தெரிவித்தார்.

## பால் மாவின் விலைகள்...

செலுத்தப்பட்டுள்ளதாக, பால் மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பால் மாவின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென, சங்கத்தின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதிக்கிணங்க எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலைகளை மேலும் குறைக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த ஏப்ரல் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவின் விலைகள் 200 ரூபாவால் குறைக்கப்பட்டன. இதேபோன்ற விலைக் குறைப்பு ஒன்றை ஜுலை மாத ஆரம்பத்திலும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதேவேளை, நாட்டில் மாதாந்தம் 6,500 முதல் 7,000 மெற்றிக் தொன் வரையிலான பால் மா உபயோகப்படுத்தப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மழையுடனான காலநிலை...

பிரதேசங்களிலும் கடும் மழை வீழ்ச்சி பதிவானதாகவும் அந்த மழை வீழ்ச்சி தற்காலிகமானது என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நேற்றுக் காலை பெய்த கடும் மழையால், அப்பிரதேசங்களின் பல்வேறு வீதிகள் வெள்ளத்தினால் மூழ்கி, போக்குவரத்துக்களும் பாதிப்புக்குள்ளாகின. அத்துடன் பிற்பகல் வேளைகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் மேல், சப்ரகமுவ, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் கண்டி,நுவரெலியா, காலி, மாத்தறை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் 75 மில்லி மீட்டருக்கு அதிகமான மழை பெய்யலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நீதிமன்றத்தை நாடவுள்ளதாக...

பிரவேசிப்பதற்கு தகைமையற்றவர்கள் எனப் பெயரிட்டுள்ளதாக பிரசாரம் செய்துள்ளமை மற்றும் அமெரிக்கத் தூதரகம் இது தொடர்பில் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளமை பாரிய மனித உரிமை மீறலாகுமென, வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார்.

இதனால், தமது கௌரவத்துக்கும் நற்பெயருக்கும் பாரிய அழுத்தங்கள் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை பெற்றுக்கொள்ள ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இது தொடர்பில் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜுலி சங்கிற்கு கடிதமூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு செல்வதற்காக கடந்த 14 வருடங்களில் விசா அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கவில்லை. இது தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவருக்கோ அல்லது வேறு அதிகாரிகளுக்கோ தகைமைகளை முன்வைக்கவில்லை என்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொலன்னறுவை... (03 ஆம் பக்கத் தொடர்)

பந்துல குணவர்த்தன தலைமையி ல் பொலன்னறுவை நகரில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்த்தன, கொவிட்19 தொற்றின் பின்னர் நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாதிப்புக்குள்ளான பெருமளவானோரின் போக்குவரத்து சிரமங்களை குறைப்பதற்காக புதிய 15 பஸ் வண்டிகளை பெற்றுக் கொடுக்க முடிந்தது. இதையிட்டு போக்குவரத்து அமைச்சரான நான், மகிழ்ச்சி அடைகிறேன். பொலன்னறுவை மாவட்ட மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக ராஜாங்க அமைச்சர் எமக்கு அறியத் தந்திருந்தார்.

## நாட்டில் அமைதியான...

முறையில் நடைபெறுவதற்கு பங்களிப்பை வழங்கியமைக்காக அவர் அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது கடமையை எந்த தடையுமின்றி முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கியமைக்காக அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கும் அமைச்சர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார். அத்துடன் மே தின கூட்டங்கள் மற்றும் மே தின ஊர்வலங்கள் நடைபெற்ற பகுதிகளில் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் சீருடையுடன் மேடையில்...

தெரிவிக்கின்றன. பேலியகொடை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் 52 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

களனி விளையாட்டு மைதானத்தில் கடந்த 30) ஆம் திகதி இரவு இந்த இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இங்கு பாதுகாப்புக் கடமைகளிலிருந்த கான்ஸ்டபிளே, மேடையில் சீருடையில் ஏறி பாடியுள்ளார்.

## சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு...

சுமார் 8,200 பேரிலிருந்தும் இம்முறை கலந்துகொள்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு 2200 பேருக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராக உள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை பிரிட்டன் செல்லவுள்ளார். கடந்த ஆண்டு செப்டெம்பரில் தனது தாயார் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்குப் பின்னர் சார்ள்ஸ் மன்னர் அரியணை ஏறினார்.

## பொதுமக்களின் யோசனைகளை...

அதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம் தொடர்பிலான யோசனைகளை, கீழ்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் பொதுமக்களையும் சிவில் அமைப்புக்களையும் கோருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைகள் மற்றும் கருத்துக்களை கவனத்தில் கொண்டு புதிய சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ADB அதிகாரிகளுடன் அமைச்சர்...

சியோல் நகரில் நடைபெறும் 56 ஆவதுஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற அமைச்சர் அலி சப்ரி, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் நிதி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று பணிப்பாளருடன் கலந்துரையாடியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் தென் கொரியா என்பன EAsia நிதியத்தினூடாக இலங்கைக்கு தமது ஆதரவை வழங்குமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.




## டீசல் விலை 20 ரூபா... (03 ஆம் பக்கத் தொடர்)

எரிபொருள் விலைக்கேற்ப, பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பு கிடையாது, அவ்வாறு ப ஸ் கட்டணம் குறைக்கப்படுமானா ல் பஸ் போக்குவரத்து சேவையிலிருந்து விலகிக்கொள்ள நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## SJB க்கு எதிரான... (03 ஆம் பக்கத் தொடர்)

முன்பதாக ,எத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கையையும் மேற்கொ ள்ளவில்லை என்றும் அதன் மூலம் சட்ட நியதிகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் தமது எம்.பி. பதவியை இல்லாதொழிப்பதற்காக மேற்படி பிரதிவாதிகளால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம், சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பளித்து அதனை செல்லுபடியற்றதாக்க உத்தரவு பிறப்பிக்குமாறும், அவர் தமது மனவில் கேட்டுள்ளார்.

## ஷங்ரிலா மைதானத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

பிக்கு மாணவர்கள் மற்றும் 1,200 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் விநியோகிக்கப்படும்.

சிங்கப்பூரின் மகா கருணா பௌத்த சங்கமும் சிங்கப்பூரின் விலிங் ஹார்ட்ஸ் (Wiling Hearts) அறக்கட்டளையும் இணைந்து ஏற்பாடு செய்யும் வெசாக் அன்னதான நிகழ்வு, அன்றைய தினம் இரவு 7.00 மணிக்கு ஷங்கிரிலா பசுமை மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், அது மே 05 மற்றும் 06 ஆம் திகதிகளிலும் தொடர்ந்து நடைபெறும். இதற்கு இணையாக மின்விளக்கு அலங்காரத் தோரணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன், இலங்கை கடற்படை, சிவில் பாதுகாப்புப் படை, இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இராணுவ பக்திப் பாடல் குழுக்களினால் நிகழ்த்தப்படும் பக்திப் பாடல் நிகழ்ச்சி ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேடையில் மே 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் இடம்பெறும்.

## நைஜீரியாவில்... (03 ஆம் பக்கத் தொடர்)

அபராதம் மற்றும் பிற நிபந்தனைகளை கப்பல் நிறுவனம் பூர்த்தி செய்தவுடன், இலங்கை பணியாளர்களை விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை வெளியுறவு அமைச்சு கப்பல் உரிமையாளருடன் செய்து வருகிறது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் வேண்டுகோளின்படி, கென்யாவின் நைரோபியிலுள்ள உயர்ஸ்தானிகராலயம் உதவிகளை வழங்கியதுடன், சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை இலங்கை பணியாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தது. கென்யாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனநாதன், நவம்பர் 13, 2022 அன்று கப்பலில் இருந்த இலங்கை பணியாளர்களை சந்தித்து அவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தார்.

நீதிமன்றக் காவலில் வைக்கப்படாமல் அவர்களது கப்பலிலேயே பணியாளர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யவும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். உயர்ஸ்தானிகர் கனநாதன் இலங்கையர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய உரிமைகளை முழுமையாக வழங்குவதை உறுதி செய்தார். குழு உறுப்பினர்களில் 16 இந்திய பிரஜைகளும் இருந்ததால், கென்யாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் அபுஜாவிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து இது தொடர்பில் செயற்பட்டது.

## பொதுநல விடயங்களில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கவில்லை. ஆனால், சிறந்த அனுபவமுள்ள பௌஷி எம்பி ஆதரவளித்துள்ளார். இதே போன்று எதிர்க்கட்சியிலுள்ள சிறந்த அனுபவமுள்ளோர், எதிர்காலத்தில் அரசின் தூர நோக்குத் திட்டங்களை ஆதரிக்க உள்ளனர். இதற்கான முன்னோடி உதாரணமாகவே பௌஷி செயற்பட்டுள்ளார். பொருளாதாரத்தின் பிடியிலிருந்து மெது,மெதுவாக மக்கள் மீண்டு வருகின்றனர். இதனால் தான், இதுபோன்ற இசைநிகழ்ச்சி மற்றும் களியாட்டங்களில் மக்கள் கலந்துகொள்வதாகவும் அசாத்ஸாலி தெரிவித்தார். பெலாரஸ் பல்கலைக்கழகத்திலிருந்து....

இம்மாணவன் பாடசாலைக் காலத்தில் பாடசாலையின் பிரதி மாணவர் தலைவராக கடமையாற்றியதோடு, பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளிலும் திறமை காட்டியவர்.

இம்மாணவனின் கழுத்தில் ஒரு கட்டு காணப்பட்டதாகவும் மற்றும் அதன் ஒரு முனை அறையின் அலுமாரியில் கட்டப்பட்டிருந்ததாகவும் அங்கு சென்ற மானவர்கள் தெரிவித்தனர். குறித்த மாணவன் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு காரணத்தால் இறந்தாரா என அந் நாட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கிழக்கில் தீவிரமடையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மரணமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மரணமும் கடந்த ஏ ப்ரல் மாதம் பதிவாகியுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, கிழக்கு மாகாணத்தில் இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் அதிகூடிய டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,800 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். கடந்த மாதம் மட்டும் 600 நோயாளர் அங்கு அடையாளம் காணப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மார்ச் மாதம் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரம், உப்புவெளி மற்றும் குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பகுதியில், அதிகளவிலான டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு குடம்பிகளை தடுப்பதற்கு கப்பீஸ் எனப்படும் மீன்களை பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் கேட்டு பெற்றுக்கொள்ளுமாறும், சீமெந்து தொட்டிகளை முற்றாக அகற்றுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பெலாரஸ் பல்கலைக்கழக... (03 ஆம் பக்கத்தொடர்)

இம்மாணவன் பாடசாலைக் காலத்தில் பாடசாலையின் பிரதி மாணவர் தலைவராக கடமையாற்றியதோடு, பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளிலும் திறமை காட்டியவர்.

இம்மாணவியின் கழுத்தில் ஒரு கட்டு காணப்பட்டதாகவும் மற்றும் அதன் ஒரு முனை அறையின் அலுமாரியில் கட்டப்பட்டிருந்ததாகவும் அங்கு சென்ற மானவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு காரணத்தால் இறந்தாரா என அந் நாட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## GS சேவை 60 வருடம்...

ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 60 வருடங்கள் நிறைவடைவதையிட்டு ஜனாதிபதி கிராம உத்தியோகத்தர் அனைவருக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் நிலையத்தில்...

கைதுசெய்த பொலிஸார், அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கொள்ளையிடப்பட்ட பணத்தில் 45,000 ரூபாவையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் ஐஸ் போதைப் பொருள் விற்பனை செய்பவரெனவும், மற்றையவர் மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பவரெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## போலி இந்திய evisa குறித்து...

முகவரிகள் இந்திய இவிசாவை வழங்குவது அவதானிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பதாரர்கள் இந்திய ஈவிசாவைப் பெறுவதற்கு இந்தப் போலி URLகளைப் பயன்படுத்த வேண்டாமென்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவுறுத்தியுள்ளது.

# சூடானின் போருக்குள் சிக்குண்டுள்ள 171 பேர் ஜித்தா வருகை; இலங்கையரும் அடங்குவதாக சவூதி தூதுவர் தெரிவிப்பு



சூடானின் உள்நாட்டு போருக்குள் சிக்குண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளை பாதுகாப்பாக மீட்டு அழைத்துவரும் நடவடிக்கையின் கீழ் நேற்று முன்தினம் மாலையில் ஜித்தா நகரை வந்தடைந்துள்ள 171 பேரில் இலங்கையரும் அடங்கியுள்ளனர் என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இவர்கள் மாட்சிமை பொருந்திய மன்னரின் கப்பலான "அபஹா" மூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, சவூதி அரேபிய அரசின் தலைமைத்துவ வழிகாட்டுதலின் கீழ், சூடானில் சிக்கித்தவிக்கும் பல்வேறு நாட்டினரையும் வெளியேற்றும் முயற்சியின் தொடர்ச்சியாக, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட 41 சவூதி பிரஜைகளும் மற்றும் ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ், கொமொரோஸ், இலங்கை, உக்ரைன், மடகாஸ்கர், இங்கிலாந்து, சிரியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த 171 பேர்களும் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை ஜித்தா நகரை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் தத்தமது நாடுகளுக்குப் புறப்படுவதற்குத் தயாராகும் வகையில் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதில் சவூதி அரேபியா காட்டிவரும் ஆர்வத்தினையும் தூதுவர் உறுதிப்படுத்தினார்.

சூடானில் சிக்குண்டுள்ளவர்களை பாதுகாப்பாக வெளியேற்றும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சூடானில் இருந்து இதுவரை 102 நாடுகளைச் சேர்ந்த 5409 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களில் 225 சவூதி பிரஜைகள், 5184 பேர் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## செலான் வங்கி பீ.எல்.சீ.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q. 9ன் கீழ் பதிவு செய்யப்பட்டது) 1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டு 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08 ம் பிரிவின் கீழ் 2023 ஜனவரி 24 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

**கிளை** : மில்லேனியம்

**கணக்கு இலக்கம்** : 0860-00010783-001

(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008 நவம்பர் 27ம் திகதியிடப்பட்ட 904, 905 மற்றும் 906ம் இலக்க பிணைமுறிகள் மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம்.ஜீ.ஆர்.பீ. குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஜனவரி 20ம் திகதியிடப்பட்ட 1407, 1408 மற்றும் 1409ம் இலக்க பிணைமுறிகள் ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை “கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான” 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்டு PV 7496 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட, கொழும்பு 03 இல் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள சுபர் லின்க் டிரவல்ஸ் (பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தினால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறிகளின் மீது பெறப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளுக்காக 2022 ஏப்ரல் 25ம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக நூற்று இருபத்தைந்து மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரூபா முப்பத்தாறு சதத் (ரூ.125,973,448.36) தொகையை வட்டியுடன் சேர்த்து (சலுகைக் கால வசதிகள் தவிர்த்து) செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான நூற்று இருபத்தைந்து மில்லியன் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரூபா முப்பத்தாறு சதத் (ரூ.125,973,448.36) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 ஏப்ரல் 26ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் மேற்குறித்த பிணைமுறியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகையில் பகுதிக் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 904, 905,906, 1407, 1408 மற்றும் 1409ம் இலக்க அடகு முறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி. சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

அ). **தவணைக் கடன் I** வசதியின் மீது 2022 ஏப்ரல் 25ம் திகதியில் ஐம்பது மில்லியன் நானூற்று எழுபதாயிரத்து நானூற்று முப்பத்திரண்டு ரூபா (ரூ.50,470,432.00) தொகை மற்றும் 2022 ஏப்ரல் 26ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை முப்பத்தொன்பது மில்லியன் எண்ணூற்றுப் பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு ரூபா அறுபத்திரண்டு சதத் (ரூ.39,818,990.62) தொகை மீது பதினாறு வீத (16%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

ஆ). **தவணைக் கடன் II** வசதியின் மீது 2022 ஏப்ரல் 25ம் திகதியில் எழுபத்தைந்து மில்லியன் ஐந்நூற்று மூன்றாயிரத்து பதினாறு ரூபா முப்பத்தாறு சதத் (ரூ.75,503,016.36) தொகை மற்றும் 2022 ஏப்ரல் 26ம் திகதி முதல் கொடுப்பனவுகள் முற்றாக செலுத்தப்படும் வரை அறுபத்தொரு மில்லியன் இருநூற்று இருபத்தேழாயிரத்து இருநூற்று ஐம்பத்தேழு ரூபா முப்பத்து மூன்று சதத் (ரூ.61,227,257.33) தொகை மீது பதினாறு வீத (16%) வருடாந்த வட்டியுடன் சேர்த்த தொகை.

**மேற் குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை:**

**(உருப்படி 1)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70/14 ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.10ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் தரைத் தளத்தின் அடுக்குமாடி அலகு 35 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 35. இன் எல்லைகளாவன:

வடக்கு : இந்த அலகு மற்றும் அலகு CE9 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

கிழக்கு : இந்த அலகு மற்றும் அலகு 34 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE4 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

மேற்கு : இந்த அலகு மற்றும் கொள்ளுப்பிட்டி ஒழுங்கையின் வரிமதிப்பீட்டு இலக்கம் 70 ஐக் கொண்ட (பகுதி) லொட் X1 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

அடிமட்டம் : CE3 (கீழ்) மற்றும் CE4 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

உச்சி : அலகு 56 (மேல்) இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்தாறு புள்ளி எட்டு சதுர மீற்றர் (26.8 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 288 சதுர அடிகளாகும்.**

அலகு 35 என்பது ஒரு விற்பனை நிலையமாவதோடு அலகு 35 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE9 மற்றும் CE6 ஆகும்.

அடுக்குமாடி ஆதனத்தின் பொதுவான கூறுகளில் அலகு 3.5 இன் பிரிக்கப்படாத பகிரத்தக்க பெறுமதியான 0.651% உடன் சேர்த்து ஆகும்.

**பொதுவான கூறுகளுடன் சேர்த்து ஆகும்.**

பிரசித்த நொத்தாரிசு பீ.கே.எஸ். பண்டார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.03.02ம் திகதியிடப்பட்ட 256ம் இலக்க கைமாற்றல் உறுதியில் விபரமாக விளக்கப்பட்டுள்ளது.

**(உருப்படி 02)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) மற்றும் தற்போது 70/14A ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1992.09.18ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 3695 எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் தரைத் தளத்தின் அடுக்குமாடி அலகு G37 (விற்பனை நிலையம்) என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு G37 இன் எல்லைகளாவன:

வடக்கு : இந்த அலகு மற்றும் அலகு CE24 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

கிழக்கு : இந்த அலகு மற்றும் உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தின் லொட் X ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE20 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

மேற்கு : இந்த அலகு மற்றும் அலகு G36 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் : CE20 (கீழ்) இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

உச்சி : அலகு F40 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி (மேல்)

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்தாறு புள்ளி மூன்று சதுர மீற்றர் (26.3 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 283 சதுர அடிகளாகும்.**

அலகு G37 என்பது ஒரு விற்பனை நிலையமாவதோடு அலகு G37 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE24 ஆகும்.

அடுக்குமாடி ஆதனத்தின் பொதுவான கூறுகளில் அலகு G37 இன் பிரிக்கப்படாத பகிரத்தக்க பெறுமதியான 0.634% உடன் சேர்த்து ஆகும்.

**பொதுவான கூறுகளுடன் சேர்த்து ஆகும்.**

பிரசித்த நொத்தாரிசு பீ.கே.எஸ். பண்டார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999.03.02ம் திகதியிடப்பட்ட 257ம் இலக்க கைமாற்றல் உறுதியில் விபரமாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008 நவம்பர் 27ம் திகதியிடப்பட்ட 904ம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம்.ஜீ.ஆர்.பீ. குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஜனவரி 20ம் திகதியிடப்பட்ட 1408ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற் குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன அட்டவணை:**

**(உருப்படி1)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 36 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 36 இன் எல்லைகளாவன: வடக்கு இந்த அலகு மற்றும் CE1 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு இந்த அலகு மற்றும் CE7 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு 37 மற்றும் அலகு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : CE1, CE9, CE10 மற்றும் அலகு 16 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) மேற்புறமுள்ள அலகு 57 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்து நான்கு சதுர மீற்றர் (24.0 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 258 சதுர அடிகளாகும்.**

அலகு 36 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 36 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் ஊநு6 ஆகும்.

**(உருப்படி 2)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 37 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 37 இன் எல்லைகளாவன: வடக்கு : இந்த அலகு மற்றும் CE1 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு : இந்த அலகு மற்றும் அலகு 36 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு இந்த அலகு மற்றும் CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : CE1, CE9 மற்றும் அலகு 16 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) : மேற்புறமுள்ள அலகு 57 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்தொன்று புள்ளி ஆறு சதுர மீற்றர் (21.6 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 232 சதுர அடிகளாகும்.**

அலகு 37 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 37 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 3)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 38 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 38 இன் எல்லைகளாவன: வடக்கு இந்த அலகு மற்றும் CE1 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு : இந்த அலகு மற்றும் அலகு 37 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு 39 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : CE1 மற்றும் அலகு 17 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) மேற்புறமுள்ள அலகு 57 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்திரண்டு புள்ளி எட்டு சதுர மீற்றர் (22.8 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 245 சதுர அடிகளாகும்.**

அலகு 38 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 38 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 4)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 39 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 39 இன் எல்லைகளாவன: வடக்கு இந்த அலகு மற்றும் CE1 இன் திறந்த வெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு : இந்த அலகு மற்றும் அலகு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்): CE1 மற்றும் அலகு 18 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) : மேற்புறமுள்ள அலகு 57 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்திரண்டு புள்ளி எட்டு சதுர மீற்றர் (22.8 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 245 சதுர அடிகளாகும்.**

அலகு 39 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 39 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி ஊநு12 மற்றும் ஊநு6 ஆகும்.

**உருப்படி 5)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 40 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 40 இன் எல்லைகளாவன: வடக்கு : இந்த அலகு மற்றும் CE1 இன் திறந்த வெளி. ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு இந்த அலகு மற்றும் அலகு 39 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு 41 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : CE1 மற்றும் அலகு 19 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்): மேற்புறமுள்ள அலகு 57 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருபத்திரண்டு புள்ளி எட்டு சதுர மீற்றர் (22.8 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 245 சதுர அடிகளாகும்.**

அலகு 40 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 40 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CB12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 6)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர் சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 44 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை CE12 எல்லைகளாவன: வடக்கு : மற்றும் இந்த அலகு அலகு 44 இன் : கிழக்கு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி இந்த அலகு மற்றும் CE11 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகிற்கும் அலகு 48 மற்றும் அலகு 47 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு 45 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : அலகு 24 மற்றும் அலகு 25 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) மேற்புறமுள்ள அலகு 57 மற்றும் CE13 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி.

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு முப்பத்தைந்து சதுர மீற்றர் (35.0 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 377 சதுர அடிகளாகும்.**

அலகு 44 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 44 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 7)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 46 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை எல்லைகளாவன: வடக்கு : இந்த அலகு மற்றும் அலகு அலகு 46 இன் ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு இந்த அலகு மற்றும் அலகு 47 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு இந்த அலகு மற்றும் CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய மேற்கு: இந்த அலகு மற்றும் CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்): அலகு 26, அலகு 27 மற்றும் CE1 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) : மேற்புறமுள்ள அலகு 57 மற்றும் CE13 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி.

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருப்பத்தொரு சதுர மீற்றர் (21.0 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 226 சதுர அடிகளாகும்.**

அலகு 46 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 46 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 8)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 47 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 47 இன் எல்லைகளாவன: வடக்கு : இந்த அலகு மற்றும் அலகு 44 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் இந்த அலகு மற்றும் அலகு 48 மத்திய இந்த அலகு மற்றும் CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு 46 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : அலகு 25, அலகு 27, அலகு 24 மற்றும் CE3 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்): மேற்புறமுள்ள அலகு 57 மற்றும் CE13 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி.

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருப்பத்திரண்டு சதுர மீற்றர் (22.0 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 237 சதுர அடிகளாகும்.**

அலகு 47 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 47 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**(உருப்படி 9)**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லையில் வட்டாரம் 38 பம்பலப்பிட்டி புனித அந்தோனி மாவத்தையில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1989.06.20ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2448A எனும் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் முதலாவது மாடியின் அடுக்குமாடி அலகு 48 என பிரித்தொதுக்கப்பட்ட கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு 48 இன் எல்லைகளாவன: வடக்கு இந்த அலகு மற்றும் அலகு 44 மற்றும் மற்றும் CE11 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி கிழக்கு : இந்த அலகு மற்றும் CE11 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி தெற்கு : இந்த அலகு மற்றும் CE12 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி மேற்கு: இந்த அலகு மற்றும் அலகு 47 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி அடிமட்டம் (கீழ்) : அலகு 23 மற்றும் CE3 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி உச்சி (மேல்) : மேற்புறமுள்ள அலகு 57 மற்றும் CE13 இன் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி.

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு இருப்பத்திரண்டு புள்ளி ஒன்பது சதுர மீற்றர் (22.9 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 246 சதுர அடிகளாகும்.**

அலகு 48 என்பது ஒரு விற்பனை நிலையமாகும்.

அலகு 48 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE12 மற்றும் CE6 ஆகும்.

**பொதுவான கூறுகளுடன் சேர்த்து ஆகும்.**

பிரசித்த நொத்தாரிசு வை.பீ. ராஜரட்னம் என்பவரால் திகதியிடப்பட்ட 299,300, 301, 302 மற்றும் 303 ம் இலக்க கைமாற்றல் உறுதி மற்றும் 1990.12.12ம் திகதியிடப்பட்ட 340 மற்றும் 341ம் இலக்க கைமாற்றல் உறுதி 390ம் இலக்க கைமாற்றல் உறுதி பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000.10.02ம் திகதியிடப்பட்ட 316ம் இலக்க கைமாற்றல் உறுதியில்ஆகியவற்றில் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளது

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008 நவம்பர் 27ம் திகதியிடப்பட்ட 905ம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம்.ஜீ.ஆர்.பீ. குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஜனவரி 20ம் திகதியிடப்பட்ட 1407ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட மூன்றாவது ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லையில் வட்டாரம் 38 (பம்பலப்பிட்டி) கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள புனித அந்தோனி மாவத்தை (முன்னர் கொள்ளுப்பிட்டி ஒழுங்கை) புனித அந்தோனி மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70 (பகுதி) ஐக் கொண்ட அடுக்குமாடி கட்டடமானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான பீ. சின்னத்தம்பி என்பவரால் 1993.05.28ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4014ம் இலக்க அடுக்குமனை நில வரைபடத்தில் இரண்டாவது மாடியின் S 1/14 (அலுவலகம்) பிரித்தொதுக்கப்பட்ட எல்லைகளாவன : அடுக்குமனை கட்டட அலகாகும். குறித்த அடுக்குமனை அலகு S 1/14 இன் எல்லைகளாவன.

வடக்கு : இந்த அலகு மற்றும் அலகு CE26A ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

கிழக்கு : இந்த அலகு மற்றும் அலகு S1/13 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

தெற்கு : இந்த அலகு மற்றும் அலகு CE20 இன் திறந்தவெளி ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

மேற்கு : இந்த அலகு மற்றும் CE26 ஆகியவற்றிற்கிடையிலான சுவரின் மத்திய பகுதி

அடிமட்டம் : அலகு F3 (கீழ்) : மற்றும் அலகு F36 இற்கு மேற்புறமுள்ள இந்த அலகின் கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

உச்சி : அலகு T3 மற்றும் அலகு T4 (மேல்) இற்கு மேற்புறமுள்ள கொன்கிறீட் தளத்தின் மத்திய பகுதி

**தரைப் பிரதேசத்தின் பரப்பளவு முப்பத்தேழு புள்ளி நான்கு சதுர மீற்றர் (37.4 சதுர மீற்றர்) ஆகுமென்பதோடு அது 403 சதுர அடிகளாகும்.**

பொதுவான கூறுகளின் பகிரத்தக்க விகிதாசாரம் 1.122%

அலகு S1/14 இற்கு அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதி CE26A ஆகும்.

குறித்த அடுக்குமனை அலகு S1/14 ஆனது அலுவலகமாக பயன்படுத்தப்படுகின்றது. பொதுவான கூறுகளுடன் சேர்த்து

01. 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) 12 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அடுக்குமனை உரிமைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அடுக்குமனை ஆதனத்தின் சட்டபூர்வமான பொதுவான கூறுகள்.

(அ) கட்டிடம் அமைந்துள்ள காணி.

(ஆ) மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள்

(இ) அத்திவாரங்கள், தூண்கள், கேடர்கள், ஆதரவுகள், பிரதான சுவர்கள் மற்றும் கட்டிடத்தின் கூரை.

(ஈ) தாங்கிகள், தண்ணீர் கழிவுநீர் மற்றும் வடிகாலமைப்பு சேவைகள் வாகன தரிப்பிடம், குப்பை அகற்றல் மற்றும் பொதுவான பயன்பாட்டிற்காகவுள்ள கருவிகள் மற்றும் பொருத்துதல்கள்.

(உ) ஆதனத்தின் இருப்பிற்கு, பராமரிப்பிற்கு, பாதுகாப்பிற்கு அல்லது பொதுவாகப் பயன்படுத்துவதற்கு தேவையான ஏனைய அனைத்து பாகங்களும் வசதிகளும்.

(ஊ) நடைக்கூடங்கள், புறக்கூடங்கள், படிக்கட்டுகள், படிக்கட்டு வழிகள், மின்தூக்கிகள், நகரும் படிகள், களஞ்சியப்படுத்தும் இடம், தோட்டம் மற்றும் நுழைவாயில்கள் மற்றும் கட்டிடத்தின் இருப்பு போன்றவை...

2. மேற்கூறிய அடுக்குமனை நிலவரைபட இலக்கம் 4104 இல் விவரிக்கப்பட்ட பொதுவான கூறுகள்

CE26 (அ) இது இரண்டாவது மாடியில் உள்ள ஒரு கழிப்பறை

(ஆ) இது இரண்டாவது மாடியில் உள்ள அலகுகளின் பயன்பாட்டிற்காக உள்ளது

CE26A (அ) இது இரண்டாவது மாடியில் உள்ள ஒரு நடைக்கூடம்

(ஆ) இது இரண்டாவது மாடியில் உள்ள அலகுக்கான அடுத்துள்ள அணுகத்தக்க பொதுவான பகுதியாகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு எஸ். குகதரன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008 நவம்பர் 27ம் திகதியிடப்பட்ட 906ம் இலக்க பிணைமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம்.ஜீ.ஆர்.பீ. குமாரி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஜனவரி 20ம் திகதியிடப்பட்ட 1409ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

(திருமதி) வீ.ஏ. பரணகம

சட்டத்தரணி,

உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்

# கிழக்கின் குரல்



# யாழ்ப்பாண தலைவர்கள் எடுத்த முடிவால் கிழக்கு மாகாணம் பலவீனப்படுத்தப்பட்டது

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினை, 75வருடகால வரலாற்றில் யாழ்ப்பாண தலைவர்கள் எடுத்த முடிவினால் பலவீனப்பட்டிருக்கின்றது என கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தற்போது ஐரோப்பா, ஆசியா, உள்ளிட்ட உலக நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், இடதுசாரிக் கொள்கையின்பால் வளர்ந்து நிற்கின்ற நாடுகளின் தாக்கம், இதனை எவ்வாறு பாதிக்கின்றது என்பதோடு, இதனைக் கையாண்டு இலங்கையைப் பாதுகாப்பதோடு, கிழக்கிலுள்ள எமது மக்களின் இருப்பு, கலை கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டிய நிலையில் நாங்கள் நிற்கிறோம்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தின கூட்டம் திங்கட்கிழமை (01) மட்டக்களப்பு களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மீண்டும் மீண்டும் இனவாதப் பேச்சுக்களைப் பேசுகின்ற கூட்டம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது.

எமது மண்ணுக்கான மாண்மீயத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது, தொடர்பில் மிகக் கச்சிதமாகச் சிந்தித்து முன்னேற வேண்டிய காலகட்டத்தில் நாங்கள் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம்.

காணிப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல், பட்டிருப்பு பாலம் தற்போது உடைந்து விழும் அபாயத்தில் உள்ளது. எனவே நான் பொறுப்பு மிக்க அமைச்சர் என்ற ரீதியில் பட்டிருப்பு பாலத்தையும், சந்திவெளி பாலத்தையும், ஒரு வெளிநாட்டுத் திட்டத்தின் கீழ் செப்பனிடுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எமது மக்கள் சலித்து விட வேண்டாம் மக்களுக்கு வாக்குறுதியளித்தது போன்று நாம் கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்தை தொடர்ந்து பாதுகாப்போம். பயங்கரவாத தடைச் சட்டம் என்பதை நான் தனிப்பட்ட ரீதியில் உணர்ந்திருக்கின்றேன். அச்சட்டம் பற்றி மக்களும் அறிவார்கள். அது ஏற்றுக் கொள்ள முடியாத சட்டமாகும்.

எதிர்கட்சியிலிருப்பவர்கள் அதனை எதிர்க்கலாம். ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் வலிகளை வைத்துக் கொண்டு அதனை முழுமையாக எதிர்க்க முடியாது. அதிலும் நலிவடைந்திருக்கின்ற எமது கல்வி, பொருளாதாரங்களைச் சீரழிக்கின்ற போராட்டங்களை நடாத்த முடியாது.

இந்த நிலையில்தான் வட பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்ற முடிவு கிழக்கு மாகாணத்தில் சாத்தியமில்லை.

ஒரு அரசியல் இயக்கமாக நாங்கள் பலம் பெறவேண்டும். கிழக்கு மாகாணத்தின் அடுத்த கட்ட தலைவிதியைத் தீர்மானிக்கின்ற தலைவர்களை, உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து கண்டு பிடிப்பது எமது கட்சியின் பணியாகும் என்றார்.

# உடற்பயிற்சி மூலம் நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதே எமது இலக்கு

## வோர்க்கஸ் யூனியன் தலைவர் எம்.எச்.ஜெய்னுதீன்



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

உடற்பயிற்சி இல்லாது தொற்றா நோயின் தாக்கத்திற்கு உள்ளாகுவோரின் தொகை தற்காலத்தில் அதிகரித்துள்ளது. ஆகையால், பொதுமக்கள் மத்தியில் உடற்பயிற்சியின் அவசியம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, தொற்றா நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதே அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியனின் இலக்காகும் என அதன் தலைவர் எம்.எச். ஜெய்னுதீன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியனின் வருடாந்த போட்டி நிகழ்வுகளுக்கு உதவி, ஒத்துழைப்பு வழங்கிய அனுசரணையாளர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று நீர்ப் பூங்கா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றிய தலைவர் ஜெய்னுதீன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

'உடற்பயிற்சி செய்வோம் உடல் ஆரோக்கியம் பேணுவோம்' எனும் தொனிப்பொருளில் தொழிற்பட்டு வரும் அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியன் மூன்றாவது வருடமாக நடாத்திய நடை மற்றும் இலகு ஓட்டப் போட்டிகள் இம்முறை வெற்றிகரமாக நடந்தேறின. அதிகமானவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றமை எமக்கு மகிழ்ச்சியளித்தது என்றார்.



திருக்கோவில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நடன திருவிழா திருக்கோவில் வலய கல்விப் பணிமனையில் கடந்த சனிக்கிழமை (29) இடம்பெற்றது. திருக்கோவில் வலய கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் தலைமையில் இடம் பெற்ற இந் நடனத் திருவிழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் செயலாளர் டபிள்யு. ஜி. திசாநாயக்க, விசேட விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஏ. கனகசூரியம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பொத்துவில் பிரதேசத்திலுள்ள மருந்தகங்கள் சுற்றிவளைப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவ ஆய்வுக்கூடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவருவதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கு அமைய மருந்தகங்கள் கண்காணிப்பு வாரத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் வியாபார உத்தரவு பத்திரமில்லாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை, மருந்தாளருக்கான தகைமை சான்றிதழ் இல்லாமை, போதியளவில் மருந்துகளை தேக்கிவைக்க பொருத்தமான களஞ்சிய வசதியின்மை, பொருத்தமான வெப்பநிலை பேணப்படாமை, காலாவதியான மருந்துகள் காட்சிப்படுத்தப்பட்டமை போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

மருந்து விற்பனை நிலையங்களில் நிலவும் குறைபாடுகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மருந்து விற்பனை நிலையங்களில் பாரிய குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதோடு, இதனை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், உரிய மருந்தகம் மூடப்படுமெனவும் கூறினார்.

நோயாளிகளுக்கு பாதுகாப்பான மருந்து, மாத்திரைகளை கொடுப்பதை உறுதிப்படுத்த வேண்டியது எமது பாரிய பொறுப்புகளில் ஒன்றாக காணப்படுவதாகவும் இதனை உரிய மருந்தக உரிமையாளர்கள் கருத்திற் கொண்டுசெயற்படவேண்டுமெனவும் தெரிவித்தார்.

# மு.காவின் நம்பிக்கைக்கு பாத்திரமாக செயற்பட்டவர் மர்ஹூம் சல்மான்

## அன்னாரின் மறைவுக்கு ஹரீஸ் எம்.பி அனுதாபம்

(கல்முனை குறூப் நிருபர்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக மிளிர்ந்தவர் முன்னாள் பாராளுமன்ற உறுபினர் மர்ஹூம் எம்.எச்.எம். சல்மான் என, பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, எமது கட்சியின் முக்கியஸ்தரும், பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் நம்பிக்கைக்குரியவருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மானின் திடீர் மறைவு மிகவும் கவலையளிக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த அன்னார், தனது பதவியை கொண்டு சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பியதுடன், தீர்வுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

புனர்வாழ்வு அதிகாரசபை தலைவராகவும், துறைமுகங்கள் அதிகாரசபை பிரதித் தலைவராகவும் இவர் பதவிவகித்த காலப்பகுதியில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருந்தமையை இங்கு நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

முஸ்லிம்களின் இனப்பிரச்சினை விவகாரங்களிலும் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளிலும் உயரிய பங்களிப்பை செய்திருந்தார்.

அன்னாரின் இழப்பு முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் மிகப்பெரும் இழப்பாகும். இவர் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் எனக்கு நல்ல பல ஆலோசனைகளை, கூறிய விடயங்களை இப்பொழுதில் எண்ணிப் பார்க்கிறேன் என்றார்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கஞ்சா கலந்த சுருட்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் படி உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்த கஞ்சா கலந்த சுருட்டையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க் கிழமை (02) ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் மட்டக்களப்பு களுவன்கேணியில் திங்கட்கிழமை (01) நடைபெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், த.கலையரசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்: துறைநீலாவணை நிருபர்)

# முதலை தொல்லையால் மீனவர்கள் அச்சம்

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் சின்னக்கலுவான் ஆற்றில் முதலைகள் அதிகளவில் நடமாடுவதால் மீன் பிடிக்கும் மீனவர்கள் அச்சமடைந்து, மீன் பிடியில் ஈடுபடுவதை தவிர்த்துள்ளதால், பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் ஆற்றிற்கு அருகாமையில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளும் மிக அச்சத்திற்கு மத்தியிலே விவசாயத்தில் ஈடுபடுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக 20 இற்கும் மேற்பட்ட முதலைகள் காணப்படுகின்ற நிலையில், மூதூர் பிரதேச சபை எச்சரிக்கை பலகையினை இட்டு பொது மக்கள் அபாயத்தில் சிக்குவதற்கு முன் பாதுகாப்பு, முன் ஆயத்தத்தை மேற்கொள்ளுமாறு, தோப்பூர் வாழ் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரி மாணவர்கள் இருவருக்கு தங்கப்பதக்கம்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வினா, விடைப் போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் இருவருக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களுக்கிடையில் உள்ள மாணவர்களுக்கிடையில் விஞ்ஞானக் கல்வியை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின் மூலம், மும்மொழியிலும் விஞ்ஞான வினா, விடைப் போட்டியை கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையில் மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (30) நடாத்தியது.

இப்போட்டியானது தரம் 6 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த ந.விஷால், உ.துவாரகேஸ் ஆகிய இரு மாணவர்களும் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்கள்.

இப் போட்டிக்கான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் கல்லூரியின் அதிபர் இராசதுரை பாஸ்கர் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்கள் ஆகியோர்கள் வழங்கி போட்டியில் வெற்றிபெறச் செய்துள்ளதுடன், பாடசாலைக்கும்,பெற்றோர்களுக்கும் பெருமையை ஈட்டித்தந்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பரிபாலனசபைக்கு புதிய தலைவர்

**தலைமன்னார் விசேட நிருபர்**



மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய பரிபாலன சபையின் நடப்பு வருட நிர்வாகத் தலைவராக பொறியியலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பிரதி தலைவராக திருமதி கைலாசப்பிள்ளை, இணைச் செயலாளர்களாக எஸ்.யு.சந்திரகுமாரன் (மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பொதுத் திறைசேரி நிதி அமைச்சு), எஸ்.பிரிந்தாவனன் நாதன் (முன்னாள் மன்னார் நகர சபை உறுப்பினர்), பொருளாளர்களாக ஏ.ஐ.தயானந்தராஜா (ஓய்வு நிலை அதிபர்), கி.சுரேஸ்குமார் (மன்னார் மாவட்டச் செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்), கே.ஞானேந்திரன் (பட்டயக் கணக்காளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய பரிபாலன சபையின் நடப்பு வருடத்துக்கான நிர்வாகத் தெரிவு, கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

## வடமராட்சியில் மணலுடன் தப்பிச் செல்ல முயன்ற டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு!

### சாரதி கைது, இருவர் தப்பியோட்டம்

**யாழ்.விசேட, நாகர்கோவில் விசேட நிருபர்கள்**



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிக் கொண்டு பயணித்த டிப்பர் வாகனமொன்று தப்பிச் செல்ல முயன்றபோது, அவ்வாகனத்துக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி சாரதியைக் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு வல்லிபுர ஆழ்வார் கோயிலை அண்மித்த பகுதியில் கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்ததையடுத்து, அங்கு சென்ற பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது, வீதியால் பயணித்த இந்த டிப்பர் வாகனத்தை வழிமறித்துச் சோதனையிட முயன்றபோது, அவ்வாகனத்தின் சாரதி கடமையிலிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரரொருவரை மோதி காயம் ஏற்படுத்தி விட்டு, தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் டிப்பர் வாகனத்துக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியபோது, டிப்பர் வாகன சில்லில் துப்பாக்கிச் சன்னம் பட்டு காற்றுப் போனது. இதனையடுத்து, வாகனம் தொடர்ந்து செல்ல முடியாத நிலையில், டிப்பர் வாகனச் சாரதியை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, டிப்பர் வாகனத்திலிருந்த இருவர் தப்பியோடியுள்ளனர்.

கைது செய்த சாரதியிடம் விசாரணையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்தபோது, சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தமையால் தப்பிச்செல்ல முயன்றதாகத் தெரிவித்துள்ளார்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மணலுடன் கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனத்தையும் சாரதியையும் பருத்தித்துறை பொலிஸாரிடம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளதுடன், தப்பியோடிய இருவரைக் கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## குடிநீர் வசதியை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் நடைப்பயணம்

**யாழ். விசேட, நாகர்கோவில் விசேட நிருபர்கள்**



இலங்கையில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நிதி சேகரிக்கும் நோக்கில் பிரித்தானியாவில் இயங்கி வரும் 'புனர்வாழ்வும் புது வாழ்வும்' எனும் அமைப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) நடைப்பயணத்தை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர். வைத்தியக் கலாநிதி த.சத்தியமூர்த்தியின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நடைப்பயணத்தில், பிரித்தானியாவில் வசித்து வரும் இளைஞர் 55 கிலோமீற்றர் தூரம் நடந்திருந்தார்.

யாழ். நகரிலிருந்து நடைப்பயணத்தை ஆரம்பித்த அவர், பருத்தித்துறை முனைவரை பயணித்து, அங்கிருந்து மீண்டும் புத்தூர் சந்தியை வந்தடைந்தார்.

வறுமையில் வாழும் மக்களுக்கு கிணறுகளை அமைத்துக்கொடுத்தல் , நன்னீர் இல்லாத பிரதேசங்களுக்கு குழாய் மூலமான குடிநீர் வசதியை ஏற்படுத்திக்கொடுத்தல் ஆகிய உதவிகளை 'புனர்வாழ்வும் புதுவாழ்வும்' அமைப்பினர் செய்து கொடுக்கவுள்ளனர்.

புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வசிக்கும் தமிழர்கள், பிரித்தானியாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் கொடையாளர்களின் பங்களிப்புடன் 'புனர்வாழ்வும் புதுவாழ்வும்' எனும் அமைப்பு இயங்கி வருவதுடன், வறுமையில் வாழும் மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றது.

## வவுனியா, கிளிநொச்சியில் மேதினக் கூட்டங்கள்

**வவுனியா விசேட, கிளிநொச்சி குறூப் நிருபர்கள்**



அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம், வவுனியா நகரசபை மண்டபத்திலும் சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்திலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (05) நடைபெற்றன.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதனின் தலைமையில் வவுனியாவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனத்தைச் சேர்ந்தோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஊழியர்களின் நலன்சார் பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதேவேளை, சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு.மனோகரன் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## சாவகச்சேரி நகரில் கசிப்புடன் ஒருவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நகரில் 10 லீற்றர் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) இரவு பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இவரிடமிருந்து கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர் கசிப்பு வைத்திருந்தமை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, சோதனை நடத்தி இவரைக் கைது செய்துள்ளனர்.

புத்தூர் பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேநபர் கசிப்பை கொண்டு சென்ற போதே, பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா கனகராயன்குளம் ம.வியின் நூற்றாண்டு விழா



வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையிட்டு மாபெரும் மரதன் ஓட்டப் போட்டியும் நூறு பானைகளில் பொங்கல் பொங்கும் விழாவும் கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்றன.

மேற்படி பாடசாலையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட நிகழ்வுகளின் போது மரதன் ஓட்டப் போட்டி, பன்றிக்கெய்தகுளம் சந்தியில் ஆரம்பமாகியதுடன், பாடசாலையின் முன்னாள் அதிபர் ச.பத்மநாதன் கொடியசைத்து போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

15 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த மரதன் ஓட்டம் ஏ09 வீதியால் சென்று கனகராயன்குளம் மகா வித்தியாலய முன்றலில் நிறைவடைந்ததுடன், இதில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவன் பா.விழிவண்ணன் முதலாமிடத்தையும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவன் ர. பிரசாந் இரண்டாமிடத்தையும் வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலய மாணவன் ச.கபிலன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, பாடசாலை வளாகத்தில் பொங்கல் பொங்கி நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அல்லைப்பிட்டியில் மோட்டார் சைக்கிள் – கார் விபத்தில் இரு இளம் பெண்கள் பலி; இருவர் காயம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், பெண்ணொருவர் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காரொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்குநேர் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கோப்பாயைச் சேர்ந்த 26 வயதுடைய நவநீதராசா நிலக்சனா, மானிப்பாயைச் சேர்ந்த 31 வயதுடைய கீதாரட்ணம் திவ்யா ஆகியோரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றைய பெண் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காரில் பயணித்த வடமராட்சி, புலோலியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுதாகரன், கருணாமூர்த்தி விமலாதேவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியூடாக யாழ்ப்பாணத்திலிருந்து வேலணை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த இரு பெண்களும், நயினாதீவு அம்மன் ஆலயத்துக்குச் சென்று விட்டு திரும்பிய போதே, விபத்தை எதிர்நோக்கி உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விரிவான விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## கொடிகாமம் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

**சாவகச்சேரி விசேட, நாகர் கோவில் விசேட நிருபர்கள்**



யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் எருவன் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (02) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த அல்வாய் கிழக்கைச் சேர்ந்தவரும் இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றியவருமான 34 வயதுடைய சத்தியநாதன் சத்தியானந்தன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த இவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பளு தூக்கும் போட்டி; தென்மராட்சிக்கு பெருமை தேடித்தந்த வீரர் கௌரவிப்பு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

பளு தூக்கல் போட்டிகளில் சர்வதேச ரீதியாக தென்மராட்சி மண்ணுக்கு பெருமை தேடிக் கொடுத்த ச.புசாந்தனை கௌரவிக்கும் நிகழ்வு, யாழ். சாவகச்சேரி, பெரிய மாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது.

கலை மன்றத்தின் 45ஆவது ஆண்டு விழாவையிட்டு நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் ஓரங்கமாக இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, கருக்குவாச்சி ஆலய முன்றலிலிருந்து மங்கள வாத்திய இசையுடன் விழா நாயகனான சாவகச்சேரியைச் சேர்ந்த பளு தூக்கல் வீரர் புசாந்தன் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

விழா நாயகனுக்கான வாழ்த்துரையை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் நிகழ்த்தினார்.

## வடமராட்சி கடையொன்றில் இளைஞர் சடலமாக மீட்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லை முனியப்பர் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பழக் கடையொன்றிலிருந்து

இளைஞரொருவரின் சடலத்தை நேற்று செவ்வாய்க்கிழமை (02) பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த பழக் கடையில் வேலை செய்து வந்த, பலாலியைச் சேர்ந்தவரும் தற்போது அச்சுவேலி பத்தமேனி பிரதேசத்தில் வசித்து வந்தவருமான 36 வயதுடைய வசந்தகுமார் ஸ்ரீகாந்த் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் காணப்பட்ட நிலை சந்தேகத்துக்கிடமான முறையில் உள்ளமையால், இது கொலையா அல்லது தற்கொலையா எனும் கோணத்தில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

[illegible]

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
| --- | --- | --- |
| [illegible] | [illegible] | [illegible] |

LB FINANCE

[illegible]


# பாக். மின்சாரத் திட்டங்களில் சீனா 21 பில்லியன் டொலர் முதலீடு

பாகிஸ்தான் மின்சக்தி திட்டங்களில் சீனா 21 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளதாக 'த நியுஸ்' என்ற பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

குவதார் துறைமுகநகரில் அமைக்கப்படவிருந்த இறக்குமதி நிலக்கரி மூலமான அனல் மின்நிலையம் அதிக செலவை ஏற்படுத்தக் கூடியது என்பதால் பாக். மின்சக்தித்துறை அதிகாரிகள் அதை சூரிய ஒளித்திட்டமாக மாற்ற முனைந்தனர்.

சீனா அதற்கு சம்மதிக்காத நிலையில் பாக். அதிகாரிகள் இறக்குமதி நிலக்கரிக்கு பதிலாக தார் பிரதேசத்தில் வெட்டப்படும் உள்ளூர் நிலக்கரியை பயன்படுத்தும் திட்டத்தை முன் வைத்தனர்.

எனினும் அதற்கான போக்குவரத்து செலவு அதிகமென்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய சீனத் தரப்பு, இறக்குமதி நிலக்கரிக்கு ஏற்றவகையிலேயே மின்நிலையம் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டினர். இதையடுத்து சீன தரப்புவாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று தகவல் வெளியிட்டுள்ள இப்பத்திரிகை, 300 மெகாவொட்ஸ் சக்திகொண்ட இந்த அனல் மின் நிலையம் 2025 டிசம்பரில் உற்பத்தியை ஆரம்பிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் சீன பொருளாதார தாழ்வாரம் என அழைக்கப்படும் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்கனவே 11,337 பில்லியன் டொலர் பெறுமதியான எட்டு மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு 7,320 மெகாவொட்ஸ் மின்சாரம் தற்போது உற்பத்தியாகி வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும்; ஐந்து மின்சார உற்பத்தித் திட்டங்கள் நிர்மாணத்தில் உள்ளதோடு இவை செயற்பாட்டுக்கு வந்ததும் 4,328 மெகாவொட்ஸ் மின்சாரம் பெறப்படும் என்றும் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜி20 சுற்றுலாத்துறை;

# மாதிரி மாநாட்டை நடத்திய ஏற்பாட்டாளர்கள்

எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் மூன்று தினங்களுக்கு காஷ்மீர் ஸ்ரீ நகரில் நடைபெறவுள்ள ஜி20 சுற்றுலா நடவடிக்கைகள் குழுக் கூட்டத்துக்கான மாதிரிக்கூட்டமொன்று கடந்த மாதம் 29ஆம் திகதி ஸ்ரீ நகர் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஜம்மு–காஷ்மீர் சுற்றுலா திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாதிரி அமர்வில் காஷ்மீர் சுற்றுலாத்துறை மாணவர்கள் வெளிநாட்டு பிரதிநிதிகளைப் போல கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

எதிர்வரும் செப்டம்பரில் இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் புதுடில்லியில் ஜி20 உச்சிமாநாடு நடைபெறுகிறது. இதற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு, நிதியமைச்சர்கள் மாநாடு என்பன நடைபெற்றன. இதே சமயம் ஜி20 நாடுகளுக்கான சுற்றுலா அபிவிருத்தி தொடர்பிலான மாநாடும் நடைபெறவுள்ளது. ஸ்ரீநகரில் அம்மாநாடு நடைபெறவுள்ளதால் அதுபோன்ற மாதிரி மாநாடே மாணவர்களின் பங்களிப்போடு ஒத்திகையாக நடத்தப்பட்டதாக சுற்றுலாத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்திருந்தனர்.

ஜி20 சுற்றுலா மாநாட்டின் மூலம் சுற்றுலாத்துறையை தனது பிரதான வருமான மார்க்கமாகக் கொண்டிருக்கும் ஜம்மு–காஷ்மீர் பிராந்தியம் உலகின் கவனத்தைப் பெறும் என்றும் உலகின் பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகக் கவனம் பெறும் என்றும் ஸ்ரீ நகரைச் சேர்ந்த ஒரு உயர்மட்ட சுற்றுலா அதிகாரி கருத்து தெரிவித்தார்.

முன்மாதிரி மாநாட்டில் கலந்து கொண்ட மாணவர்கள் தம்மை சவூதி அரேபியா, கனடா, பிரான்ஸ், தென் கொரியா, பிறேசில் போன்ற நாடுகளின் பிரதிநிதிகளாகக் கருதிக் கொண்டு தத்தமது நாடுகளின் சுற்றுலாத் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கட் போட்டியின் இறுதியில் மோதல்;

# களு/ திஸ்ஸ தேசிய பாடசாலையின் உதவிக் கப்டன் தாக்குதலில் காயம்

## பயாகல பொலிஸார் விசாரணைகள் முன்னெடுப்பு

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



களுத்துறை கல்வி வலயத்தைச் சேர்ந்த இரண்டு பிரபல பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற வருடாந்த கிரிக்கட் போட்டியின் இறுதி ஆட்டத்தின்போது ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் (01) அணியொன்றின் உதவிக் கப்டன் படுகாயமடைந்து நாகொட பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு மேலதிக சத்திர சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

களுத்துறை திஸ்ஸ தேசிய பாடசாலைக்கும் களுத்துறை மகா வித்தியாலத்துக்கும் இடையிலான 13 ஆவது ஒரு நாள் கிரிக்கட் போட்டியின் இறுதியாட்டத்தில் களுத்துறை மகா வித்தியாலயம் வெற்றி பெற்ற நிலையில் மாணவர்களும் ஆதரவாளர்களும் வெற்றிக்களிப்பில் மைதானத்துக்குள் பிரவேசித்துள்ளனர். இதன்போது இரு தரப்பின் ஆதரவாளர்களுக்கிடையில் மைதானத்தில் ஏற்பட்ட கைகலப்பில் திஸ்ஸ தேசிய பாடசாலை அணியின் உதவி கப்டன் நெத்ஸர சில்வா (18 வயது) என்ற உயர் வகுப்பு மாணவன் கிரிக்கட் மட்டையினால் தலையில் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்துள்ளார்.

களுத்துறை பெரியாஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மாணவனின் தலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதால் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக களுத்துறை பெரியாஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பவம் தொடர்பில் பயாகல பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

**CEYLON SHIPPING CORPORATION LTD**

**(Ministry of Ports, Shipping & Aviation)**

**PROCUREMENT NOTICE**
**INVITATION FOR BIDS**

**INVITATION FOR BIDS FOR THE SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF ACCOUNTING SOFTWARE FOR THE FINANCE DEPARTMENT OF CEYLON SHIPPING CORPORATION LTD.**

**BID NO. AD/CD/23/04**

1. Bids are invited from interested, eligible parties by the Chairman, Department Procurement Committee of the Ceylon Shipping Corporation Ltd (CSCL) for **Supply, Installation, Commissioning and Maintenance of an Accounting Software Solution for the Finance Department of Ceylon Shipping Corporation Ltd.**
2. This service is mainly focused on following areas / requirements.
   - Application Software that use as a Solution to smooth the processes of the Finance Department.
   - Services to implement the system as well as support within the Project Warranty and Post Warranty Maintenance Period.
3. **Terms of Reference** for this **"Invitation for Bids for the Supply, Installation, Commissioning and Maintenance of Accounting Software for the Finance Department of Ceylon Shipping Corporation Ltd."** are available in the Ceylon Shipping Corporation Ltd website **www.cscl.lk.**
4. Interested parties may purchase the Bidding Documents on the payment of document fee of Rs. 5,000.00 +VAT, non-refundable deposit from the office of Ceylon Shipping Corporation Ltd from **08th May 2023 until 31st May 2023 from 9.00 a.m. to 3.00 p.m.**
5. Complete Bids in sealed envelopes marked as **"Invitation for Bids for the Supply, Installation, Commissioning and Maintenance of Accounting Software for the Finance Department of Ceylon Shipping Corporation Ltd."** shall be delivered by registered post to the Chairman, Department Procurement Committee of the Ceylon Shipping Corporation Ltd, No. 27, MICH Building, Sir Razik Fareed Mawatha, Colombo 01 or Deposit in the Tender Box at Front Desk of Ceylon Shipping Corporation Ltd not later than **14.00 hrs on 01st June 2023** and will be opened immediately after closing of the bid. Late bids will not be accepted.
6. The Pre-Bid Meeting will be held on **24th May 2023 10.00hrs** at Ceylon Shipping Corporation Ltd, No. 27, MICH Building, Sir Razik Fareed Mawatha, Colombo 01.
7. Bid should be submitted along with Bid Security to a value of **Rs.110,000.00** with a validity period **of 180 days** from the date of closing of the bid.

**Chairman,**
**Department Procurement Committee,**
**Ceylon Shipping Corporation Ltd,**
**No. 27, MICH Building,**
**Sir Razik Fareed Mawatha,**
**Colombo 01.**


# சடலம் மீட்பு

ரஷ்யா, பெலாரஸில் மருத்துவ பீடத்தில் 4 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் அங்குள்ள விடுதி அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டியைச் சேர்ந்த மருத்துவபீட மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர், வருடத்தின் சிறந்த மருத்துவ மாணவனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டியிலுள்ள பிரபல தனியார் கல்லூரியொன்றில் உயர்தர உயிரியல் பிரிவில் பயின்ற இந்த மாணவன் ரஷ்ய பெலாரஸிலுள்ள மருத்துவ பீடத்தில் சேர்ந்துள்ளார்.

மாணவனின் தாயார் தனது மகனுக்கு தொலைபேசி மூலம் கடந்த சனிக்கிழமை அழைப்பு விடுத்தபோது, அவர் அழைப்புக்கு பதிலளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை தொடர்ந்து மாணவனின் தாயார் தனது மகனின் நண்பர்களை அழைத்து, தனது மக னுக்கு தொடர்ந்து அழைப்பு விடு த்தும் அவர் பதிலளிக்காததால், அவரை தொடர்புக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது சக மருத்துவ மாணவர்கள் அவர் தங்கியிருந்த அறைக்கு சென்று பார்த்த போது அவர் சடலமாக கிடந்ததை அவதானித்துள்ளனர்.

# இறக்குவானை – தெனியாய வீதியில் மண்சரிவு அனர்த்தம் போக்குவரத்து தடை



இறக்குவானை தெனியாய (A17) வீதியில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தம் காரணமாக போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

மேட்டுப்பாங்கான பகுதியிலிருந்து பெரும் மண்திட்டுடன் பாரிய கல் ஒன்றும் சிறிய கற்களும் மரங்களுடன் இடம்பெயர்ந்து வீதியை மூடியுள்ளதால் வீதித்தடை ஏற்பட்டுள்ளது. இதனால் இறக்குவானை காலி வீதியில் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

இவ்வீதியின் 100 – 101 கிலோமீற்றர் வரையான பிரதேசத்திலேயே மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. கொலன்ன பிரதேச செயலகப்பிரிவில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் அவதான நிலை ஏற்பட்டுள்ளது. இறக்குவானை தெனியாய வரையிலான மலைப்பாங்கான பிரதேசத்தின் பல இடங்களிலும் அவதானநிலை நிலவுவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிவில் வேலைகளுக்கான விலைக்கோரல் அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - அம்பாறை

1. 1ஆம் அட்டவணையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். (PSSP செயற்றிட்டத்தின் கீழ் நிதியிடப்படுகின்றது)

| தொ. இல. | அடையாள இலக்கம் | விபரங்கள் | விலைமனு தாரரின் தரத் தேவைப்பாடு | விலை மனுப் பிணை முறி (ரூபா) | பொறியியலாளரின் மதிப்பீடு (ரூபா) மில்லியன் | நிறைவு செய்வதற்கான காலம் (நாட்காட்டி நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|
| 01. | AM/RDHS/MOP/ P4/BC/2023/01 | அம்பாறையிலுள்ள RDHS அலுவலகத்தை மேம்படுத்துதல் | C8, C7, C6 | 53,000.00 | 5.21 | 120 |
| 02. | AM/RDHS/MOP/ P4/BC/2023/02 | லிஹினியாகம PMCUவில் கிளினிக் நோயாளர் காத்திருக்கும் பிரதேசம் / OPD என்பவற்றை நிர்மாணித்தல் | C9 , C8 | 18,000.00 | 1.73 | 90 |
| 03. | AM/RDHS/MOP/ P4/BC/2023/03 | மாவனாவல PMCUவில் கிளினிக் நோயாளர் காத்திருக்கும் பிரதேசம் / OPD என்பவற்றை நிர்மாணித்தல் | C9 , C8 | 18,000.00 | 1.73 | 90 |
| 04. | AM/RDHS/MOP/ P4/BC/2023/04 | தமன பிரதேச வைத்தியசாலையில் மொத்த வழங்கல் உபநிலைய அறைக்கான Meter cubicle நிர்மாணித்தல் | C9 , C8 | 11,000.00 | 1.04 | 60 |
| 05. | AM/RDHS/MOP/ P4/BC/2023/05 | மகாஓய ஆதார வைத்தியசாலையிலுள்ள பாதுகாப்பு நிலையத்தை மேம்படுத்துதல் | C9 , C8 | 3,000.00 | 0.25 | 60 |
| 06. | AM/RDHS/MOP/ P4/BC/2023/06 | அம்பாறை RDHS அலுவலகத்தில் இரட்டை ஊழியர் விடுதியின் (B03 & B04) புதுப்பித்தல் வேலைகள் | C9 , C8, C7 | 27,000.00 | 2.60 | 120 |
| 07. | AM/RDHS/MOP/ P4/BC/2023/07 | தெஹியத்தகண்டிய ஆதார வைத்தியசாலையில் இரட்டை MO விடுதிகளுக்கான நீர்த் தாங்கியை நிர்மாணித்தல் | C9 , C8 | 9,000.00 | 0.86 | 60 |
| 08. | AM/RDHS/MOP/ P4/BC/2023/08 | முவன்கல PMCU வில் பிரதான நுழைவாயில் மற்றும் முன்பக்க வேலியை நிர்மாணித்தல் | C9 , C8 | 9,000.00 | 0.86 | 60 |
| 09. | AM/RDHS/MOP/ P4/BC/2023/09 | அம்பாறை RDHS அலுவலகத்திலுள்ள உயிரியல் மருத்துவ பொறியியல் களஞ்சியசாலைக்கு Racking முறையை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | C9 , C8 | 4,000.00 | 0.37 | 60 |
| 10. | AM/RDHS/MOP/ P4/BC/2023/10 | சந்துன்புர PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 4,500.00 | 0.42 | 60 |
| 11. | AM/RDHS/MOP/ P4/BC/2023/11 | லிஹினியாகம PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 4,500.00 | 0.42 | 60 |
| 12. | AM/RDHS/MOP/ P4/BC/2023/12 | மாவனவெல PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 4,500.00 | 0.42 | 60 |
| 13. | AM/RDHS/MOP/ P4/BC/2023/13 | நவமெதகம PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 4,500.00 | 0.42 | 60 |
| 14. | AM/RDHS/MOP/ P4/BC/2023/14 | அம்பகஹவெல்ல PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 3,000.00 | 0.28 | 60 |
| 15. | AM/RDHS/MOP/ P4/BC/2023/15 | உஹன PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 3,000.00 | 0.28 | 60 |
| 16. | AM/RDHS/MOP/ P4/BC/2023/16 | கொக்னாஹர PMCU விலுள்ள மருந்துகள் களஞ்சியசாலையில் ராக்கை வசதிகளை நிறுவுதல் | C9 , C8 | 3,000.00 | 0.27 | 60 |
| 17. | AM/RDHS/MOP/ P4/BC/2023/17 | பன்னல்கம PMCU விலுள்ள MO விடுதியை மேம்படுத்துதல் | C9 , C8 | 4,500.00 | 0.42 | 60 |
| 18. | AM/RDHS/MOP/ P4/BC/2023/18 | அம்பாறை MOH இல் தெரிவுசெய்யப்பட்ட பொல்வத்த கிராமோதய சிகிச்சை நிலையத்தை புதுப்பித்தல் | C9, C8, C7 | 22,000.00 | 2.16 | 120 |
| 19. | AM/RDHS/MOP/ P4/BC/2023/19 | அம்பாறை MOH இல் தெரிவு செய்யப்பட்ட பரகஹகெலே கிராமோதய சிகிச்சை நிலையத்தை புதுப்பித்தல் | C9, C8, C7 | 43,500.00 | 4.34 | 120 |
| 20. | AM/RDHS/MOP/ P4/BC/2023/20 | பதியத்தலாவ MOH இல் தெரிவு செய்யப்பட்ட கொலமன்தலாவ கிராமோதய சிகிச்சை நிலையத்தை புதுப்பித்தல் | C9 , C8 | 13,000.00 | 1.29 | 90 |
| 21. | AM/RDHS/MOP/ P4/BC/2023/21 | மஹாஓயா MOH இல் தெரிவு செய்யப்பட்ட இத்தபொல கிராமோதய சிகிச்சை நிலையத்தை புதுப்பித்தல் | C9 , C8 | 10,500.00 | 1.02 | 90 |

2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் ICTAD (தற்போதைய CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் பின்வரும் மூலப் பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
   அ. பணியாட்தொகுதியில் NCT சகிதம் 5 வருட கால அனுபவம் கொண்ட தொழில்நுட்ப அதிகாரியொருரை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.
   ஆ. விலைமனுதாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் விலைக்கோரல் தொகைக்கு நிகரான ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் CIDA பதிவுப் புத்தகத்தில் சான்றிதழுடன் கூடிய வேலை வழங்குநரிடமிருந்து / ஒப்புதல் அறிக்கையை ஆதார ஆவணமாக இணைத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்தல் என்பவற்றை அம்பாறை பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் மேற்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 03-05-2023 ஆம் திகதி முதல் 24-05-2023 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்கள் 25-05-2023 ஆம் திகதி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் 06-09-2023 ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட 1ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இலங்கை ரூபா தொகைக்கு அம்பாறை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த விலைமனுப் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திலும் மற்றும் ‘‘நிபந்தனையற்ற கோரிக்கை’’ பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு என முகவரியிட்டு நகல் பிரதியுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், அம்பாறை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
10. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 25-05-2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணி என்பதுடன் அதன் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
12. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-05-19 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அம்பாறை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
13. ஒவ்வொரு விலைமனுதாரரும் தங்களது தற்போதைய பணிச் சுமையை விலைமனு ஆவணத்தின் உள்ள தகுதித் தகவல் படிவம் 2 இல் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்.
14. அம்பாறை, பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் திருப்தியற்ற செயற்திறனைச் செய்த அல்லது தவறான தகவல்களைச் சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டின்போது நிராகரிக்கப்படுவர்.
15. பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். ஏதாவது ஒன்று அல்லது அனைத்து விலைமனுக்களையும் தனது சொந்த முடிவின் பிரகாரம் நிராகரிக்க பிராந்திய பெறுகைக் குழு அதிகாரம் அளிக்கின்றது.

**மருத்துவர் S.T.A. பிரசங்க சேரசிங்க,**
**தவிசாளர்**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**அம்பாறை.**

02-05-2023

## அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்பட்ட நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டது என 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கம் கொண்ட கம்பனி சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகிறது.

நிறுவனத்தின் பெயர்:
**டிஅன்ட்ஜே கன்ஸ்ட்ரக்ஷன் (பீவிடீ) எல்டீடி**

கூட்டிணைக்கப்பட்ட காலம்:
**2023.04.28**

பதிவு செய்யப்பட்ட முகவரி :
**இலக்கம் 265/C, தேவால வீதி, கொஸ்வத்த, பத்தரமுல்லை.**

**நிறுவனச் செயலாளர்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
திங்கட்கிழமை 2023.05.01
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5103 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 15,266,921.00
ஆங்கில எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 6 8 4 0 9 1

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1451 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 318,524,234.00
ஆங்கில எழுத்து: N — சுப்பர் இலக்கம்: 12 — வெற்றி இலக்கங்கள்: 06 39 50 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம்: 412 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,640,810.80
வெற்றி இலக்கினம்: கும்பம் — வெற்றி இலக்கங்கள்: 13 22 26 33 — விசேட இலக்கினம்: கும்பம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1133 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 88,345,361.20
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 04 52 60 78

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1558 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,445,211.60
வெற்றி இலக்கினம்: மீனம் — வெற்றி இலக்கங்கள்: 5 0 4 5 6 3

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம்: 3345 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 100,306,546.64
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 12 15 20 71

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/05/12/19 | ஜூன் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 02/05/12/19 | ஜூன் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/05/12/19 | ஜூன் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 06/13/20/26 | ஜூன் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 07/14/21/27 | ஜூன் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 08/15/22/28 | ஜூன் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 09/16/23/30 | ஜூன் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை

## குப்பையிடும் உறைகளைக் கொள்வனவு செய்தல்

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் வைத்தியசாலைக்குத் தேவையான குப்பையிடும் உறைகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(1) இது தொடர்பில் ஆர்வம் காட்டுவோர் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-05-03ஆம் திகதி முதல் 2023-05-11ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(02) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளைக்கு குப்பையிடும் உறைகளைக் கொள்வனவு செய்வற்கான விலைமனு 2023-05-12 எனக் குறிப்பிட்டு 2023-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2023-05-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(3) விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வெறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(5) விலைமனு ஆவணங்களை இலவசமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(6) அரசாங்க ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

(7) குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னத்தே கொண்டுள்ளது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112763038)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில, தெஹிவளை.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to: classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023.05.03

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | புப்போகம பிரதேசத்தில் குழாய் வழி விஸ்தரிப்பிற்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **CKD/NC/DPC/PIPE LINE EXT/ MADATUGAMA/2023/022** | 20,000/-+ VAT ** | ரூபா 1,215,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 101.77 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25/05/2023 மு.ப. 10.00 மணி |
| 02 | வேரகல - ஹபரன நீர் வழங்கல் திட்டத்தில் விநியோக முறைமைக்காக HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **CKD/NC/DPC/LAYING/ WERAGALA/2023/023** | 20,000/-+ VAT ** | ரூபா 716,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 மற்றும் C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 47.90 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25/05/2023 மு.ப. 10.00 மணி |
| 03 | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தில் மிரிஹெல்ல தாங்கி முதல் குருந்துஹின்ன தாங்கி வரையில் பிரதான பம்பிக்கு HDPE குழாய்கள் மற்றும் பொருத்தல்களைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/NRW/KEGALLE/ CIVIL/2023/01** | 12,500/-+ VAT ** | ரூபா 230,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 மற்றும் C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 22.7 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 24/05/2023 மு.ப. 10.00 மணி |
| 04 | முகாமையாளர் (கம்பஹா) பிராந்தியத்தில் புதிய இணைப்புகளை வழங்குதல் மற்றும் HDPE குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் விசேடங்களைப் பதித்தல் (குழாய் அகழிகளை அகழ்தல் மற்றும் மீள்நிரப்புதல் என்பவை சமூகத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்)<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/LAYING/GAM(O&M)/2023/15** | 12,500/-+ VAT ** | ரூபா 324,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 மற்றும் C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.6 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24/05/2023 மு.ப. 10.00 மணி |
| 05 | கம்பஹா பிராந்தியத்தில் புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SC/GAM(O&M)/2023/03** | 12,500/-+ VAT ** | ரூபா 324,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 மற்றும் C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.6 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24/05/2023 மு.ப. 10.00 மணி |
| 06 | வலப்பனை நீர் வழங்கல் திட்டம் / ராகல - வலப்பனை<br>ஒப்பந்த இல: **RSC-C/CE/CIVIL/CPF/ RAGALA-WALAPANE/2023/98** | 6,000/-+ VAT ** | ரூபா 120,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 8.70 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>குண்டசாலை, மத்திய கிழக்கு அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2420585)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 07 | கட்டுவன்கொட - நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு பிரவேசப் பாதையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/C/WTP ROAD-KATUWANGODA/ RH/2023-95** | 12,500/-+ VAT ** | ரூபா 185,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 மற்றும் C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.4 மில்லியன் | பி.ஒ.நி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 08 | கட்டுவன்கொட - உள்ளீர்ப்புக்கு பிரவேசப் பாதையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(S)/P&C/C/INTAKE ROAD-KATUWANGODA/RH/2023-101** | 6,000/-+ VAT ** | ரூபா 93,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.30 மில்லியன் | பி.ஒ.நி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 09 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்தின் (சபரகமுவ) இரண்டாம் மாடிக்கு அலுமினிய பகுதிபிரிப்புகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/P&D/CIVIL/ REH/OFFICE/2022/48** | 6,000/-+ VAT ** | ரூபா 78,500/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.23 மில்லியன் | பி.ஒ.நி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 10 | அம்பகஸ்தோவ நீர் வழங்கல் திட்டத்தில் வைத்தியசாலை முதல் சேனாநாயக்க சந்தி வரையில் வருமானமற்ற நீர் குறைப்பிற்காக DI/HDPE குழாய்கள் மற்றும் பொருத்தல்களை பதித்தல் மற்றும் இணைத்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ AMBAGASDOWA/2023/52** | 12,500/-+ VAT ** | ரூபா 256,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 17.10 மில்லியன் | பி.ஒ.நி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 11 | பதுளை நீர் வழங்கல் திட்டத்திலுள்ள குமாரசிங்க மாவத்தை பம்பி இல்லத்தின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/BADULLA/2023/58** | 6,000/-+ VAT ** | ரூபா 133,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 8.83 மில்லியன் | பி.ஒ.நி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 12 | மகுல்எல்ல நீர் வழங்கல் திட்டத்தில் தற்போதுள்ள Flocculator ஐ மேம்படுத்துதல்<br>ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/REH/ MAKULELLA/2022/189** | 12,500/-+ VAT ** | ரூபா 180,400/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 12.03 மில்லியன் | பி.ஒ.நி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 13 | பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டத்தின் கீழுள்ள பருத்தித்துறை பொறுப்பதிகாரி அலுவலகத்தைப் புதுப்பித்தல்<br>ஒப்பந்த இல **: RSC/N/DGM/RH/RENOVATION PPT OIC OFFICE/2023/019** | 6,000/-+ VAT ** | ரூபா 80,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C6/C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.63 மில்லியன் | பி.ஒ.நி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதி, தேநிவவ சபையில் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 14 | யாழ்ப்பாணம் மாவட்டம் - யாழ்ப்பாணம் நீர் வழங்கல் திட்டத்தில் வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல **: RSC/N/DGM/NRW/CONC-JAF/2023/017** | 4,000/-+ VAT | ரூபா 50,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7/C8 தரத்தில் CIDA பதிவு | 4.22 மில்லியன் | பி.ஒ.நி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>யாழ்ப்பாணம், சிவன் பண்ணை வீதி, தேநிவவ சபையில் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 15 | பி ஓ நிலையத்தின் (வடக்கு) எல்லை வேலி மற்றும் சைக்கிள் கூடாரத்தின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல **: RSC/N/DGM/RH/REHABILITATION OF RSC BOUNDARY/2023/026** | 4,000/-+ VAT | ரூபா 50,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C8 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு | 4.97 மில்லியன் | பி.ஒ.நி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>வவுனியா, யாழ்ப்பாணம் வீதி, தேநிவவச (வடக்கு) பிஒ நிலையத்தில் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| 16 | கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்தின் (K) புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல **: RSC/N/DGM/RH/RENO DE OFFIC E (K)/2023/020** | 4,000/-+ VAT | ரூபா 70,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7/C8 தரத்தில் CIDA பதிவு | 4.9 மில்லியன் | பி.ஒ.நி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>கிளிநொச்சி, கண்டி வீதி, 155ஆம் மைல் கல், மாவட்டப் பொறியியலாளர் **(K/M),** அலுவலகத்தில் 2023-05-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24/05/2023 பி.ப. 2.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 17 | நாவலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் அலுவலகம், Catchment பிரதேசங்கள், நீர்சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, சேவை நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனையண்டிய பிரதேசங்களின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பிற்கான சேவை ஒப்பந்தங்களை வழங்குதல்.<br>ஒப்பந்த இல**:** ප්‍රාසේම(ම)/මද/සේවා/ක්‍රිහාත/නාවලපිටිය/2023/69 | 4,000/-+ VAT | ரூபா **31,500/-** | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கெட்டம்பே, மத்திய தெற்கு அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2388086)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 18 | பாரிய கண்டி நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, Knowledge Sharing நிலையம் மற்றும் உள்ளீர்ப்பு வேலைத் தளத்தின் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பிற்கான சேவை ஒப்பந்தங்கள்<br>ஒப்பந்த இல**:**ප්‍රා.සේ.ම.(ම)/ම.තිෂ්./සේවා/ක්‍රි.හා.ත/විසල් මහනුවර/2023/23 | 12,500/-+ VAT ** | ரூபா 145,000**/-** | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, முகாமையாளர் (உற்பத்தி) அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2420585)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | இரத்தோட்டை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, சேகரிப்பு நீர்த்தேக்கம், தெளிந்த நீர்த் தடாகங்கள், சேமிப்புத் தொட்டி இடப்பரப்பு, உள்ளீர்ப்பு பம்பி இல்லம், அலுவலக இடப்பரப்புகளின் பராமரிப்பிற்கான சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිහත/රත්තොට/2023/87 | 6,000/-+ VAT ** | ரூபா 61,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2492311)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 20 | குண்டசாலை நீர் வழங்கல் திட்டத்தின் பலகொல்ல பம்பி இயக்க வேலைகள், சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பிற்கான சேவை ஒப்பந்தங்கள்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/ම.නැ/සේවා/ක්‍රිහත/කුණ්ඩසාලේ/2023/25 | 6,000/-+ VAT ** | ரூபா 110,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>குண்டசாலை, மத்திய கிழக்கு அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2420585)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 21 | நாஉல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள இயக்கம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான சேவை ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම-ම/මැ/සේවා/ක්‍රිහත/නාඋල/2023/063 | 4,000/-+ VAT | ரூபா 25,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-05-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2492311)** | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| 22 | பதுளையிலுள்ள எலதலுவ மற்றும் பண்டாரபுர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பதுளை DE அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/O&M/BADULLA/2023/80** | 4,000/-+ VAT | ரூபா 39,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 17/05/2023 பி.ப. 2.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 23 | இரசாயனங்கள் மற்றும் PVC/HDPE குழாய்கள் மற்றும் பொருத்தல்களின் போக்குவரத்திற்கான சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **SUP&MM/TRANSPORT/2022/16** | 12,500/-+ VAT ** | ரூபா 322,000 /- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 24/05/2023 மு.ப. 10.00 மணி |
| 24 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு மத்திய) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/32** | 6,000/-+ VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச,<br>இல. 175A, கலுதொட்ட கட்டிடம்,<br>நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 25 | கொழும்பு நகர தெற்கு பிராந்திய முகாமையாளருக்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/02R** | 6,000/-+ VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச,<br>இல. 175A, கலுதொட்ட கட்டிடம்,<br>நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 26 | மஹரகம பிராந்தியத்தின் ஹோமாகம பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/35** | 6,000/-+ VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச,<br>இல. 175A, கலுதொட்ட கட்டிடம்,<br>நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 27 | மஹரகம பிராந்தியத்தின் பாதுக்க பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு பெக்கோ லோடர் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2023/36** | 6,000/-+ VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச,<br>இல. 175A, கலுதொட்ட கட்டிடம்,<br>நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 17/05/2023 மு.ப. 10.00 மணி |
| 28 | கலுகங்க நீர் வழங்கல் திட்டம் - படிநிலை 01 செயற்றிட்டப் பணிப்பாளருக்கு செடான் கார் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RPC/WP/S/KGWSEP(1)/ M&E/WSP/2023/03** | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பிரதிப் பொது முகாமையாளர்,<br>(மேற்கு – உற்பத்தி), தேநீவவச,<br>உடுமுல்ல வீதி,<br>முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 24/05/2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் 7ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

**எனது இல. அம்பகோ/3/5/அ/160**
**காணி அமைச்சின்**
**குறிப்பு இல. 4-3-/3/2021/PI/154**

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக் கொள்வதற்கு எண்ணியிருக்கிறது மேலதிக விபரங்களுக்கு இல. 2324/19 21.03.2023ஆம் திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் III பகுதியினை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : நுவரெலியா |
| பிரதேச செயலகம் | : அம்பகமுவ கோரளை |
| கிராமம் | : வேவல்தலாவ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 314A அம்பகமுவ கிழக்கு |
| காணியின் பெயர் | : பிளக்வோட்டர் தோட்டம் |
| வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் | : ஆரம்ப வரைபட இலக்கம் 3473இன் துண்டிலக்கம் 1 |
| பரப்பளவு | : 03.8750 ஹெக்டெயார் |

**சிதாரா ருவின் கமகே**
**பிரதேச செயலாளர்,**
**அம்பகமுவ கோரளை.**

2023 ஏப்ரல் 27ஆம் திகதி

**பிரதேச செயலகம்,**
**அம்பகமுவ கோரளை.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## பெறுகை அறிவித்தல்

### உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2023

**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

01. ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பின்வரும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பொதி இல. | விபரங்கள் | கொள்வனவு செய்வதற்குள்ள அளவு | மீளளிக்கப் படாத விலைக்கோரல் மாதிரிப் படிவக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை முறி ரொக்கப் பணமாக (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Diathermy Machines | 01 | 5,000 | 150,000 |
| | 5 part Haematology Analyser | 03 | | |
| | Transport Neonatal Ventilator | 01 | | |
| 02 | Dental Chair | 05 | 5,000 | 170,000 |
| | Dental DR System | 03 | | |
| | X-Ray DR Panel | 01 | | |
| 03 | CTG Machine | 04 | 5,000 | 140,000 |
| | Short wave Therapy Unit | 01 | | |
| | Shock wave Therapy Unit | 01 | | |
| | Tissue Embedding Station | 01 | | |
| 04 | Instrument Cupboard | 09 | 2,500 | 38,000 |
| 05 | Passenger Elevator | 01 | 3,000 | 45,000 |
| 06 | Domestic Refrigerator | 50 | 3,500 | 56,250 |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் மாதிரிப்படிவத்தை நிதி அமைச்சின் www.promise.lk இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதுடன் கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்குதல் 2023-05-03ஆம் திகதி முதல் 2023-05-24ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை மேற்கொள்ளப்படும் என்பதுடன் 2023-05-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும். மேலதிக விபரங்களை 055-2231981 விசாரித்தறியலாம்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**3வது மாடி,**
**இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை.**

**தொலைபேசி: 055-2231981 தொலைபேசி/தொலைநகல் இல. 055-2223098**




## பெறுகை அறிவித்தல்

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**அபிவிருத்தி லொத்தர் சபை**

### விலைக்கோரலுக்கான அழைப்பு

### டீ சேர்ட்கள் (T Shirts) வழங்குதல்

**BID No: DLB/PRO/2023/15**

21,650 எண்ணிக்கையான டீ சேர்ட்களை வழங்குவதற்காக ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் சிறு அளவிலான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. 2023-05-03ஆம் திகதியிலிருந்து 2023-05-23ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 10,000.00 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-02, யூனியன் பிளேஸ், டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவின் வழங்கலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
04. விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
06. சகல விலைமனுதாரர்களும் குறித்த விலைக்கோரலுக்காக ''1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின்'' பிரகாரம் பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாவிட்டால் அது நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.
07. விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அபிவிருத்தி லொத்தர் சபைக்கு டீ சேர்ட்கள் வழங்குதல் (**BID No: DLB/PRO/2023/15)**" எனக் குறிப்பிட்டு இரு பிரதிகளிலான விலைமனுக்களை தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02, இலங்கை என்ற முகவரிக்கு 2023-05-24ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பிந்தாத வகையில் கிடைக்கச் செய்தல் வேண்டும். இதற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
08. விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியிலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2023-05-24ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
08. அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். www.dlb.lk

**தலைவர்,**
**சிறியளவிலான பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
2023-05-03.
**www.dlb.lk**

DEVELOPMENT LOTTERY Enriching Your Life

# செவ் குணசேகர நகை ஈடுபிடிக்கும் நிலையம் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்

## மீட்கப்படாத அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்களின் ஏல விற்பனை

செவ் குணசேகர அடகு நிலையத்தில் (வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்) பின்வரும் கிளைகளில் டிசம்பர் 31 2021 வரை அடகு வைக்கப்பட்டுள்ள நகைகள், ஜனவரி 31, 2023 அன்று அல்லது அதற்கு முன் திருப்பப்படாத அல்லது புதுப்பிக்கப்படாதவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த தேதிகளில் பொது ஏலத்தில் விற்கப்படும் ஏலம் காலை 10.00 மணியிலிருந்து தொடங்கும்.

| நகை அடகு வைக்கப்பட்ட கிளைகள் | இடம் & ஏல திகதி |
|---|---|
| பொரளை, டெல்கொடா, கிரிபத்கொட, கொள்ளுப்பிட்டி கொட்டிகாவத்தை, மருதானை, நீர்கொழும்பு நிட்டம்புவ, ராகம, வெள்ளவத்தை | இலக்கம் GF1, YMBA கட்டிடம், பொரளை 11.05.2023 |

- ❖ பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்கள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ எந்த ஒரு அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய, ஒன்றிணைக்க அல்லது ஒத்திவைக்க நிறுவனத்திற்கு உரிமை உள்ளது.

**No. 678/B, பேராதனை வீதி,**
**கண்டி.**

**தொலைபேசி இலக்கம் 0812222280**
**தொலைநகல் எண். 0812267267**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்கள், மருத்துவ உபகரண துணைப் பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களின் வழங்கலுக்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட உருப்படிகளுக்கான பொருத்தமான துணைப்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் கிடைக்கப்பெறும் பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இந்த ஒப்பந்தங்களின் தொழில் அமர்த்துனர் சார்பில் 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு - 10இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| இல | உருப்படி | அளவு | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) (மில்லியனில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 08 OAE இயந்திரங்கள் வழங்கல் | 08 | 20 | 3,500.00 |
| 02 | ரீச்சார்ஜ் செய்யக்கூடிய மின்கல பொதிகளுக்கான மின்கல கலங்கள் | 150 | 0.6 | 500.00 |
| 03 | நோயாளர் கண்காணிப்புக்கான SPO2 SENSORS | 1400 | 08 | |
| 04 | நோயாளர் கண்காணிப்புக்கான ETCO2 SENSORS | 580 | 12 | |
| 05 | நோயாளர் கண்காணிப்புக்கான NIBP PEDIATRIC CUFFS | 600 | 1.2 | |
| 06 | நோயாளர் கண்காணிப்புக்கான ECB கேபிள்களின் வழங்கல் | 1300 | 7 | |
| 07 | OT விளக்குகள் மற்றும் நுணுக்குக்காட்டிகளுக்கான மின்குமிழ்கள் | 770 | 16 | |
| 08 | NHSL - CARDIOLOGY CIU II UNIT - CATHLAB இயந்திரத்தின் (PHILIPS) – பழுதுபார்த்தல் | 02 | 1 | |
| 09 | NHSL - CATHLAB இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள் | 07 | 11.7 | |
| 10 | CT ஸ்கேனர் இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள் (TH கராபிட்டிய, ஹம்பாந்தோட்டை, BH ஹொரண) | 200 | 4.35 | |
| 11 | CARDIOLOGY UNIT (CIU IV) CATHLAB இயந்திரத்திற்கான (PHILIPS ALLURA XPER FD) UPS மின்கலங்கள் | 40 | 4 | |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, கணக்காளர் அலுவலகத்தில் அவை உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு ஒவ்வொரு விலைமனுதாரரினதும் விலைமனு இடக்கூடிய தொகை 5 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரர் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆவது பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ரொக்கப்பணமாக செலுத்தும் முறையில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.05.03ஆம் திகதி தொடக்கம் 2023.05.24ஆம் திகதி வரை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
7. முழுமையான விலைமனுக்களை அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகலை வெவ்வேறாக மூடி முறையே "அசல்" மற்றும் "நகல்" என்று குறிப்பிட்டு கடித உறைகளில் முத்திரையிடல் வேண்டும். இரு கடித உறைகளையும் முத்திரையிடப்பட்ட ஒற்றை கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை" குறிப்பிடுதல் வேண்டும். முழுமையான விலைமனுக்களை 2023.05.25ஆம் திகதி 10.00க்கு (மணி) அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2023.08.25ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணை 2023.09.22ஆம் திகதி வரை செல்லுபடியானதாக நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க வங்கி உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை 2684732 என்ற தொலைபேசி இலக்கத்தில் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, கணக்காளரிடம் இருந்து பெற முடியும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு–10**

# பெறுகை அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - அநுராதபுரம்

## உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2023

அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிற்குரித்தான வைத்தியசாலைக்கு பின்வரும் உபகரணங்களை வழங்கும் பொருட்டு பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் 2023-05-25ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | கேள்வி கோரல் இல. | பொருள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய 91 நாட்கள் செல்லுபடி யாகும் கேள்விப் பிணைப் பொறுப்பின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | RDHS/F8/2023/09 | Steel Glass Cupboard | 24 | 3,000.00 | 60,000.00 |
| | | Steel Cupboard | 50 | | |
| 02 | RDHS/F8/2023/10 | Office Chairs | 50 | 3,000.00 | 57,000.00 |
| | | Computer Chairs | 14 | | |
| | | Plastic Chairs | 400 | | |
| | | Executive Chairs | 30 | | |
| | | Computer Table | 14 | | |
| | | Office Table | 50 | | |
| | | Cushion Arm Chairs | 130 | | |
| 03 | RDHS/F8/2023/11 | Conference Table | 01 | 3,000.00 | 15,000.00 |
| | | Dining Table | 01 | | |
| 04 | RDHS/F8/2023/12 | Notice Board | 50 | 3,000.00 | 15,000.00 |
| | | White Board 6x 4 | 03 | | |
| | | Dust Bin 10 L | 24 | | |
| | | Dust Bin 25 L | 48 | | |
| | | Dust Bin 75 L | 48 | | |
| 05 | RDHS/F8/2023/13 | Refrigerator (Domestic) | 04 | 3,000.00 | 8,000.00 |
| | | Document Scanner | 03 | | |
| | | Fax Machine | 01 | | |
| | | Water Dispenser | 03 | | |
| | | Bar code Printer | 01 | | |
| | | Bar code Reader | 01 | | |
| | | Kitchen Scale | 03 | | |
| 06 | RDHS/F8/2023/14 | Laptop Computers | 15 | 3,000.00 | 45,000.00 |
| 07 | RDHS/F8/2023/15 | Intercom System – BH Kebithigollewa | 01 | 3,000.00 | 55,000.00 |
| | | Intercom System – RH Rajanganaya Yaya 05 | 01 | | |
| | | Intercom System – RH Kalawewa | 01 | | |
| | | Intercom System – RH Huruluwewa | 01 | | |
| 08 | RDHS/F8/2023/16 | Sucker Machine | 10 | 3,000.00 | 50,000.00 |
| | | Infusion Pump | 05 | | |
| | | Nebulizer | 05 | | |
| 09 | RDHS/F8/2023/17 | Bed Side Locker | 50 | 3,000.00 | 33,000.00 |
| | | Injection Trolley | 10 | | |
| | | Drugs Trolley | 10 | | |
| | | Delivery Bed | 10 | | |
| | | Saline Stand | 10 | | |
| | | Flat form Trolley | 08 | | |
| | | Oxygen Cylinder Cart | 10 | | |
| | | Oxygen Cylinder Cart Single | 20 | | |
| 10 | RDHS/F8/2023/18 | Spot Lamp | 10 | 3,000.00 | 50,000.00 |
| | | Spinal Board | 10 | | |
| 11 | RDHS/F8/2023/19 | Harmonic Bipolar Vessel Scalar | 01 | 3,000.00 | 15,000.00 |
| 12 | RDHS/F8/2023/20 | Dental Chair for Dental therapist With Light | 10 | 3,000.00 | 66,000.00 |
| | | Light cure Machine | 10 | | |
| | | Surgical Micro Motor unit | 10 | | |
| | | Scaling Machine | 06 | | |
| 13 | RDHS/F8/2023/21 | Table Top Mini Autoclave | 10 | 3,000.00 | 70,000.00 |
| 14 | RDHS/F8/2023/22 | Contra Angle Hand piece For Micro Motors | 19 | 3,000.00 | 35,000.00 |
| | | Mouth Mirror top | 2,000 | | |
| | | Mouth Mirror Handle | 2,000 | | |
| | | Probes - 54 | 2,000 | | |

02. அங்கீகாரம் பெற்ற வியாபாரப் பதிவுச் சான்றிதழினையுடைய நிறுவனங்கள் இக்கேள்வியினை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறும். கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பொருள் சம்பந்தமான முழுமையான விபரங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இல. 025-2222579)

03. மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழினை சமர்ப்பித்ததன் பின்னர் அநுராதபுரம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து 2023.05.03ஆம் திகதியிலிருந்து 2023-05-24ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் எவ்விதக் கட்டணமும் செலுத்தாது குறித்த கேள்விப் பத்திரத்தினை பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்வி நிபந்தனைகளுக்கமைவாக முறையாகப் பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரத்தினை 2023-05-25ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு பின் அவ்விரு கடித உறைகளையும் மீண்டுமொரு உறையில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கேள்வி கோரல் இலக்கம்" வெவ்வேறாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

06. 2023-05-25ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது எழுத்துமூல அனுமதியைப் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

07. கேள்விப் பிணைப் பொறுப்பாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடமிருந்து மட்டும் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணைப் பொறுப்பாக அல்லது அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு குறித்த தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இக்கேள்வி தொடர்பில் பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**டாக்டர் என்.சி.டீ. ஆரியரத்ன,**
**தலைவர்/ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**அநுராதபுரம்.**
**தொலைபேசி: 025-2222579**
2023-04-29


To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369 011 2 429 368

E-mail adzsuo@gmail.com

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரண உதிரிப் பாகங்களை அழிப்பதற்கான நிறுவனங்களுக்கு அழைப்பு

உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் மருத்துவ உபகரணங்களின் பழுதுபார்த்தலின்போது அகற்றப்பட்ட அழிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட பண்பைக் கொண்ட மருத்துவ உபகரண உதிரிப் பாகங்களை கீழுள்ள நிபந்தனைகளின் கீழ் அழிப்பதற்கு திறன் கொண்ட நிறுவனங்கள் பதிவு செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 01. உலோகம் கலந்த உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 02. மின்னணு சுற்று மற்றும் கலவை பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 3. இறப்பர் கலந்த உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 04. பல்வேறு கண்ணாடி விளக்குகள் மற்றும் கலவை உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் |

**நிபந்தனைகள்:**

1. உங்களது நிறுவனம் சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் அங்கீகாரம் பெற்ற சரியான பாதுகாப்பு முறையின் கீழ் அழிப்பதற்கு திறன் உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
2. எடுத்துச் செல்கின்ற அழிக்கும் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வசதி உங்களது நிறுவனத்திடம் இருத்தல் வேண்டும்.
3. அழிப்பதற்காக உள்ள உபகரண பாகங்கள் கிருமிகளைக் கொண்டிருப்பதால் பெற்றுக்கொள்கின்ற உபகரண உதிரிப் பாகங்களை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் களஞ்சியப்படுத்தல் அல்லது அழிப்பதை மேற்கொள்ளவதற்கு திறன் இருத்தல் வேண்டும்.
4. எமது நிறுவனத்தின் மற்றும் எமது நிறுவனத்திற்கு சொந்தமான அரச வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவுக்குள் இந்தப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதோடு அந்த அனைத்து இடங்களில் இருந்தும் அகற்றப்படுகின்ற அழிக்கும் பொருட்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அந்தப் பொருட்களை அந்த இடங்களில் இருந்து அகற்றிக்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.
5. அழிப்பு மேற்கொள்ளப்படுவது எந்த ஒரு கட்டணமும் அறவிடாமலா, கட்டணம் அறவிட்டா என்பதை பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு பணம் அறவிடப்படுவதாயின் அறவிடும் முறையை பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
6. உங்களது நிறுவனம் எமது நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும் என்பதோடு அதன்படி கட்டணம் செலுத்தல் மேற்கொள்ளப்படுவது காலாண்டு அடிப்படையில் நீங்கள் வழங்கும் சேவைக்கு அமையவாகும்.
7. கீழுள்ள மாதிரிக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை முறையாக பூர்த்தி செய்து 2023.05.24ஆம் திகதிக்கு முன்னர் பிரதி பணிப்பாளர் நாயகம், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு – 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மருத்துவ உபகரண உதிரிப் பாகங்களை அழிப்பதற்கான நிறுவனங்களுக்கு அழைப்பு'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
8. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்வதற்காக ரூபா 500 மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ஒன்றை செலுத்த வேண்டும். அந்தத் தொகை ''பிரதிப் பணிப்பாளர் நாயகம், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு'' என்ற பெயருக்கு பெற்றுக்கொண்ட காசுக் கட்டளை ஒன்றை (கிடைக்கப்பெறும் அலுவலகம் - மருதானை) அல்லது இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு ஒன்றை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. விண்ணப்பதாரர்களை பதிவு செய்தல் அல்லது செய்யாதிருக்கும் உரிமை பிரதிப் பணிப்பாளர் நாயகம் வசமானதாகும்.
10. பொதுவாக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு செயற்படுவதோடு, குறித்த நிபந்தனைகளின் கீழ் செயற்பட முடியாது எனில் அதற்கு அப்பால் உள்ள நிறுவனங்களிடம் இருந்து விலைமனுக்களை கோரல், ஒப்பந்தம் வழங்கும் உரிமை பிரதிப் பணிப்பாளர் நாயகம் வசமானதாகும்.
11. விலைமனுக்களை கோரும்போது குறித்த சுற்றுச்சூழல் நிபந்தனைகள் மற்றும் சரியான அழிப்பை மேற்கொள்ளவது தொடர்பிலான திறன் இல்லாத மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் குறித்த அழிப்பை செய்வதற்கு முடியாத பதிவாளர்களின் பெயர்கள் அறிவுறுத்தல் இன்றி பதிவு ஆவணத்தில் இருந்து நீக்குவதற்கான உரிமை பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் வசமானதாகும்.
12. விலைமனுக்களை கோரும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்காத, குறிப்பிட்ட நேரத்திற்கு அழிக்கும் பொருட்களை அகற்றாத நிறுவனங்களின் பெயர்களை அறிவுறுத்தல் இன்றி பதிவு ஆவணத்தில் இருந்து நீக்குவதற்கு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரிவு பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் வழங்கப்படும் என்பதை தயவுடன் கருத்தில் கொள்ளவும்.
13. மேலதிக விபரங்களை தெரிந்துகொள்வதற்கு கணக்காளரை (011-2684732) அழைக்கவும்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல.: 27, டி சேரம் மாவத்தை,**
**கொழும்பு–10**

**தொலைபேசி – 011-2691916/ 0112694479**
**தொலைநகல் – 011-2698317**

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

### மருத்துவ உபகரண உதிரிப் பாகங்களை அழிப்பதற்கான நிறுவனங்களை பதிவு செய்தல்

1. நிறுவனத்தின் பெயர்: ..........................................................................
2. நிரந்தர முகவரி: ..........................................................................
3. தொலைபேசி இலக்கம்: ..........................................................................
4. தொலைநகல்: ..........................................................................
5. மின்னஞ்சல்: ..........................................................................
6. நிறுவனத்தின் பதிவு இலக்கம்: ..........................................................................
7. அழிக்கப்படும் பொருட்களின் பண்பு: அழிப்பதற்கு உள்ளவை சுகாதார அமைச்சின் ஒப்புதலின் கீழ் அழிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள மருத்துவ உபகரண உதிரிப் பாகங்கள் என்பதோடு அழிப்பதற்கு உள்ள பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட உபகரணங்களின் பண்பு பின்வறுமாறு என்பதோடு அவைகளை அழிப்பதற்கு உங்களது நிறுவனத்திற்கு இருக்கும் திறன் அடிப்படையில் அந்த குறித்த பெட்டியின் ''✓'' அடையாளத்தை இடவும்.

| 01. உலோகம் கலந்த உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 02. மின்னணு சுற்று மற்றும் கலவை பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 3. இறப்பர் கலந்த உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் | 04. பல்வேறு கண்ணாடி விளக்குகள் மற்றும் கலவை உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் |
|---|---|---|---|
| | | | |

8. உருப்படிகளை அழிப்பதற்காக பணம் செலுத்தல்/ அறவிடும் முறை: ..................................
(எமது நிறுவனத்தில் பணம் அறவிடல்/ எமது நிறுவத்திற்கு பணம் செலுத்த/ பண அறவீடு இன்றி என்பது)
9. பணம் அறவிடல் மூலம் அல்லது பணத்தை எமது நிறுவனத்திற்கு செலுத்துவதன் மூலம் மேற்கொள்வதாயின் அந்த அறவிடல் அல்லது செலுத்தல் மேற்கொள்ளும் முறை
உறுப்படிகள் அடிப்படையில்: ☐ எடை (Kg) அடிப்படையில்: ☐
10. சுற்றாடல் அதிகாரசபை மற்றும் குறித்த சட்டதிட்டங்களுக்கு அமைய அழித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது:-
(குறித்த சட்டத்திட்டங்களுக்கு அமைய சுற்றாடல் நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
..........................................................................
..........................................................................
11. களஞ்சிய வசதிகள் தொடர்பில் விபரம்:
   - களஞ்சிய கொள்ளளவு: ..........................................................................
   - களஞ்சியம் அமைந்துள்ள இடம்: ..........................................................................
   - களஞ்சியம் செய்வதற்கு சட்டரீதியான அனுமதி பெற்றிருப்பது தொடர்பில்: ..................................
   (குறித்த ஆவணங்களை இணைக்கவும்)
12. இதுவரை நிறுவனத்தினால் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் இருந்தால் அது தொடர்பில் விபரம்:
..........................................................................
..........................................................................
..........................................................................
13. வெட் வரி இலக்கம்: ..........................................................................
14. வங்கியாளரின் பெயர் மற்றும் முகவரி: ..........................................................................
15. காசுக் கட்டளை அல்லது பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் செலுத்திய பணம்: ..................................
(இணைப்பாக சமர்ப்பிக்கவும்)
16. வேறு முக்கிய விபரங்கள்
: ..........................................................................
..........................................................................

***அழிக்கும் பொருட்களை எமது நிறுவனத்திற்கு சொந்தமான நாடு முழுவதும் அமைந்துள்ள மத்திய அரசுக்கு சொந்தமான வைத்தியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருப்பதோடு அந்த வைத்தியசாலையில் இருந்து அந்தப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக குறித்த போக்குவரத்து வசதிகள் மற்றும் குறித்த செலவுகளை உங்களது நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியின் பெயர்: ..........................................................................

நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரியின் கையொப்பம்: ..........................................................................

(கையொப்பத்திற்காக அதிகாரம் வழங்கப்பட்ட கடிதத்தை வழங்கல் வேண்டும்)

*மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் சரியான முறையின் பூர்த்தி செய்யாவிடின் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படக்கூடும்

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# தங்க ஆபரணங்கள் அடகு ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பொலன்னறுவை பிராந்திய பிரதான அலுவலகத்துக்குரிய பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **2021.12.31ஆந் திகதி வரை** அடகு வைக்கப்பட்டுள்ளதும் **2023.05.19ஆந் திகதி வரை** அடகு மீட்டுக்கொள்ளப்படாத அடகுப் பொருட்கள் கீழ்வரும் திகதிகளிலும் நிலையங்களிலும் நடாத்துவதற்குத் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஏல விற்பனையானது மறு அறிவித்தல் இன்றி வங்கியின் தற்றுணிவின் பிரகாரம் இரத்துச் செய்தல் அல்லது பிற்போடுதல், ஒன்றிணைத்து நடாத்துதல் அல்லது இத்தகைய நடவடிக்கையொன்றை மேற்கொள்ளும் உரிமை வங்கி சார்ந்ததாகும்.

மு.ப 9.00 மணிக்கு ஏல விற்பனை ஆரம்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம்.

| ஏல விற்பனைக்கு உத்தேசித்த திகதி | 2023.05.20/21 | 2023.05.20/21 |
|---|---|---|
| **ஏல விற்பனை நிகழும் வளாகம்** | பொலன்னறுவை பிரதான கிளை | தெகிஅத்தகண்டிய கிளை |
| **தங்க ஆபரணங்களுக்குரிய கிளைகள்** | பொலன்னறுவை, ஹிங்குரக் கொடை, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரம், பக்கமூன, தம்பால | அரலகன்வில, வெலிகந்தை, தெகிஅத்தகண்டிய |
| **தங்க ஆபரணங்களுக்குரிய சேவை நிலையங்கள்** | கதுறுவெல, பொலன்னறுவை வைத்தியசாலை வளாகம், தியசென்புர, லங்காபுர, ஜயந்திபுர, தியபெதும | மன்னம்பிட்டி, செவனபிட்டிய, சிரிபுர, சந்துன்புர |

**ஒப்பம்**
**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய பிரதான அலுவலகம்,**
**புதிய நகரம், பொலன்னறுவை**
**தொ.பே இல. 027-2223900/2224404/2225760/2226626/2226625**

PEOPLE'S BANK
www.peoplesbank.lk

# விலைமனுவிற்கான அழைத்தல்

### சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், அம்பாறை

## மருத்துவ உபகரணங்களுக்கான வழங்கல்

2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பின்வரும் ''2023 ஆம் ஆண்டிற்கான மருத்துவ உபகரணங்களை'' வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் முதன்மை வழங்குனர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்தும் , சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | MEDICAL EQUIPMENTS – 2023 | | | Engineer Estimate (Rs.) Mn |
|---|---|---|---|---|
| Item No. | Item | | Qty | |
| Group I (BH - Dehiattakandiya) | 1.1 | Phototherapy Machine (Double) | 01 | 5.0 |
| | 1.2. | CTG Machine | 01 | |
| | 1.3. | Otoscope | 03 | |
| | 1.4 | X-Ray Illuminator (Large) | 03 | |
| | 1.5. | Laryngoscope (Pediatric) | 02 | |
| | 1.6 | Drug Trolley | 05 | |
| | 1.7 | Emergency Drug Trolley | 04 | |
| | 1.8 | IR Lamp with stand | 01 | |
| | 1.9 | Ultrasound Treatment Machine | 01 | |
| | 1.10 | Interferential Therapy Machine | 01 | |
| Group II (BH – Mahaoya) | 2.1 | Digital Muscle Stimulator | 01 | 5.0 |
| | 2.2 | Defibrillators with $SpO_2$ | 01 | |
| | 2.3 | ECG Machine | 03 | |
| | 2.4 | Ultrasound Treatment Machine | 01 | |
| | 2.5 | Interferential Therapy Machine | 01 | |
| | 2.6 | IR Lamp with stand | 01 | |
| | 2.7 | HDU Bed | 04 | |
| | 2.8 | Bed (2 Fold) | 12 | |
| | 2.9 | Wheel Chair | 03 | |
| | 2.10 | Bed-side Locker | 10 | |

பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணத்தை இரு பிரதிகளில் பெற்று பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து, 2023.05.03 ஆம் திகதியிலிருந்து 2023.05.24 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிக்கப்பட்டவரினால் அம்பாறை பிரதேசிய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- அம்பாறை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
- அம்பாறை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் பெயரில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
- முதன்மை வழங்குனரினால் அவர்களின் உற்பத்திகளுக்காக உள்ளூர் முகவரென உங்கள் கம்பனியை நியமித்த சான்றிதழ்/ கடிதமொன்று.

1. ஒவ்வொரு தொகுதி அம்சங்களுக்கும் தனித்தனியாக விலைமனு ஆவணமானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. 2023.05.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம், அம்பாறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அம்பாறை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையானது தொகுதிப் பெயரினால் அடையாளமிடப்படல் வேண்டும்.
3. அனைத்து விலைமனுக்களும் மொத்த விலைமனுப் பெறுமதியின் 1% இற்கான விலைமனுப் பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப்பிணையானது 2023.05.25 ஆம் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
5. 063-2222991 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரிடமிருந்து எவ்வித தெளிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**மருத்துவர் S.T.A. பிரசங்க சேரசிங்ஹ,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரின் அலுவலகம்,**
**அம்பாறை.**
02.05.2023

The Housewives' companion
Classifieds on
Daily News

Sunday Observer adZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# டாக்காவில் ஒருநாள் போட்டியில் பங்கேற்கிறார் திமுத் கருணாரத்ன




இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன பங்களாதேஷில் நடைபெறும் டாக்கா பிரீமியர் டிவிசன் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளார். இதன்மூலம் அவர் நீண்ட இடைவெளியின் பின்னர் ஒருநாள் போட்டிகளுக்கு திரும்புகிறார்.

திமுத் கருணாரத்ன டாக்கா பிரீமியர் டிவிசன் கிரிக்கெட் தொடரின் சினேபுகூர் கிரிக்கெட் கழக அணிக்காக விளையாடவுள்ளார்.

திமுத் கருணாரத்ன கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் விளையாடியிருந்தார்.

குறிப்பாக, ஒருநாள் உலகக் கிண்ண இலங்கை அணியின் தலைவராகவும் அவர் செயற்பட்டு இலங்கை அணியை சிறப்பாக வழிநடத்தியிருந்தார். எனினும் அதன் பின்னர் அவர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் ஆடவில்லை. அவரை மீண்டும் இலங்கை ஒருநாள் அணிக்கு தேர்வு செய்வது குறித்து பரிசீலிப்பதாக இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்ட திமுத் கருணாரத்ன,

“மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கு திரும்புவது புத்துணர்ச்சியை கொடுப்பதுடன், இந்தப் போட்டிகள் மிகவும் தேவையான ஒருநாள் போட்டிகளாக அமையவுள்ளன. இந்த தொடரின் போது என்னுடைய அனுபவங்களை அணி வீரர்களுடன் பகிர்ந்துக்கொள்ளவுள்ளதுடன், என்னுடைய ஆட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்கும், கற்றுக்கொள்வதற்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வேன்” என்றார். டாக்கா பிரீமியர் டிவிசன் தொடரானது 12 அணிகள் மோதும் லிஸ்ட் ஏ போட்டிகளாக அமையவுள்ளதுடன், தொடரில் முன்னிலை பெறும் 6 அணிகள் பிளே–ஒப் சுற்றுக்கு முன்னேறும்.

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், திமுத் கருணாரத்னவின் இந்த ஒருநாள் போட்டிகளுக்கான மீள் வருகை இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நேபாளம் முதல் முறையாக ஆசிய கிண்ணத்திற்கு தகுதி




இம்முறை ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடும் ஆறாவது அணியாக நேபாள அணி தகுதி பெற்றுள்ளது. அத்துடன் இந்த வாய்ப்பு மூலம் முதல் முறையாக ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பை நேபாளம் பெற்றுள்ளது.

இந்த ஆண்டுக்கான ஆசியக் கிண்ணத் தொடர் எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஒருநாள் போட்டிகளாக நடைபெறவுள்ளது. இந்தத் தொடரினை நடத்தும் உரிமையினை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கொண்டுள்ளது.

ஆறு அணிகள் பங்குபெறும் இந்தத் தொடருக்கு ஐ.சி.சியின் முழு அங்கத்துவத்தினை கொண்டிருக்கும் நாடுகளான தொடரின் நடப்புச் சம்பியன் இலங்கை, பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் நேரடித் தகுதி பெற்றன.

இந்த நிலையில் தொடரில் பங்கெடுக்கும் எஞ்சிய அணியினை தெரிவு செய்வதற்காக ஆசிய கிரிக்கெட் கௌன்சில், தகுதிகாண் போட்டியை நடத்தியது. ஏப்ரல் மாதம் 18ஆம் திகதியில் இருந்து நேபாளத்தில் நடைபெற்று வந்த இந்த தகுதிகாண் தொடரில் மொத்தம் 10 அணிகள் பங்குபற்றியிருந்ததோடு, தொடரின் இறுதிப் போட்டிக்கு ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் நேபாள அணிகள் தெரிவாகின.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை (01) காத்மண்டுவில் ஆரம்பமான இறுதிப் போட்டி மழை காரணமாக நேற்றைய தினத்திலும் தொடர்ந்தது. இதில் நேபாள அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி ஆசிய கிண்ணத்திற்கு தகுதி பெற்றது.

இதன்படி ஆசியக் கிண்ணத்தில் நேபாள அணி ஏ குழுவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பலப்பரீட்சை நடாத்தவுள்ளதோடு, இந்தத் தொடரின் பி குழுவில் இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் உள்ளன.

எனினும், போட்டி நடைபெறும் இடம் இன்னும் தேர்வு செய்யப்படாததால், போட்டிகளின் சரியான அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை.

# மைதானத்தில் மோதிக்கொண்ட கொஹ்லி – காம்பீருக்கு அபராதம்

## போட்டிக் கட்டணத்தை முழுமையாக இழந்தனர்




பெங்களூர் மற்றும் லக்னௌ அணிகள் மோதிய போட்டியின்போது விராட் கொஹ்லி மற்றும் கௌதம் காம்பீர் மோதிக் கொண்ட நிலையில், இருவருக்கும் போட்டியின் ஊதியத்தில் இருந்து 100 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு லக்னௌவில் நடைபெற்ற ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் மற்றும் லக்னௌ சுப்பர் ஜெயிண்ட்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 126 ஓட்டங்கள் எடுத்த நிலையில், லக்னௌ அணி 108 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

போட்டியின் இரண்டாவது பாதியின் போது கொஹ்லி மற்றும் ஆப்கனைச் சேர்ந்த லக்னௌ வீரர் நவீன் உல் ஹக் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து, போட்டி முடிந்து வீரர்கள் கைகுலுக்கும் போது மீண்டும் கோலி – நவீன் இடையே மோதல் ஏற்பட, லக்னௌ ஆலோசகர் கம்பீர் குறுக்கிட்டார். தொடர்ந்து, கம்பீரும் கொஹ்லியும் மோதிக் கொண்ட நிலையில் சக வீரர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினர்.

இதன்போது அமித் மிஸ்ரா, டூப் பிளெசிஸ், லக்னௌ துணைப் பயிற்சியாளர் விஜய் தய்யா, நடுவர்கள் தலையிட்டு இருவரையும் விலக்கிவிட்டனர்.

இந்த மோதலை தொடர்ந்து, கொஹ்லி மற்றும் கம்பீருக்கு போட்டி ஊதியத்திலிருந்து 100 வீதமும், நவீனுக்கு 50 வீதமும் அபராதமாக விதித்து ஐ.பி.எல் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்ட அறிக்கையில் ஐ.பி. எல் நடத்தை விதிமுறைகளின் படி இரண்டாம் நிலை குற்றம் புரிந்ததாக இருவரும் ஒப்புக் கொண்டிருப்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பெங்களூரில் நடந்த ஐ.பி. எல். லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக இருந்த கம்பீரும், ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவராக இருந்த விராட் கொஹ்லியும் மைதானத்தில் மோதிக்கொண்டனர். அதன்பின் இப்போது மீண்டும் இருவருக்கும் இடையே வார்த்தைப் போர் ஏற்பட்டுள்ளது.

# 2008 சாதாரண தர அணி வெற்றி



அஸ்றப் ஏ சமத்

எட்டியாந்தோட்டை கே/தெஹிகராகொடை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் 75ஆம் ஆண்டு நிறைவையொட்டி பழைய மாணவர்களுக்கு இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் 2008 சாதாரண தர அணியினர் சம்பியன் கிண்ணத்தை வென்றனர்.

எ ட் டி ய ாந் தோட்டை வின் சென்ட் பெரேரா விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்த இந்தப் போட்டியில் மொத்தம் 22 அணிகள் பங்கேற்றன. பாடசாலை அதிபர் ஏ.எஸ்.எம். பாஹிம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# நோன்புப் பெருநாள் விளையாட்டு நிகழ்வு



மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் கிராமிய கலாசார விளையாட்டு விழா அண்மையில் (29) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ. பஷீர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.எச் முசம்மில் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் நட்டடப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதன்போது பிரதி திட்டப் பணிப்பாளர் எச்.எம்.எம். றுவைத், வாழைச்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள், பௌத்த, இந்து, இஸ்லாமிய சமய தலைவர்கள், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.ஏ. மஜீத், வங்கி முகாமையாளர் எஸ். ரவிச்சந்திரன், வங்கி கட்டுப்பாட்டுச்சபை தலைவர் ஏ.பி.ஏ. காதர் ஆகியோரும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# சுப்பர் பெசன் சம்பியன்

கல்நேவ தினகரன் விசேட நிருபர்




நேகம மெலஜன்ட் விளையாட்டுக் கழகத்தினால், புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாணந்துறை சுப்பர் பெசன் அணியினர் சம்பியன் கிண்ணத்தையும் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசினையும் வென்றனர். கடந்த வார இறுதியில் நடந்த திறந்த போட்டியில் 16 அணிகள் பங்கேற்றன. இதில் விஜிதபுர டப்ளியூ.சீ.சீ. அணியுடனான இறுதிப் போட்டியிலேயே சுப்பர் பெசன் அணி வெற்றியீட்டியது. வெற்றிக் கிண்ணத்தை அஸ்லிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக முகாமையாளரும், முஷ்ஷரி பவுண்டேசன் பணிப்பாளருமான ஏ.ஏ. அஸாம் வழங்கினார்.

# டெஸ்ட் தரவரிசை: இந்தியா முதலிடத்திற்கு முன்னேற்றம்



சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் டெஸ்ட் அணி தரவரிசையில் அவுஸ்திரேலியாவை பின்தள்ளி இந்தியா முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

டெஸ்ட் மற்றும் டி20 அணிகளின் தரவரிசை பட்டியலை ஐ.சி.சி நேற்று (02) வெளியிட்டது. 2020 ஆம் ஆண்டு மே முதல் 2022 மே வரை நடந்த போட்டிகளின் முடிவுகள் 50 வீதமும், நடப்பு பருவ போட்டிகள் முழுமையாகவும் கணக்கில் கொள்ளப்பட்டே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வருடாந்திர தரவரிசையில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில் டி20 தரவரிசையில் இந்திய அணி முதலிடத்திலும், இங்கிலாந்து அணி 2ஆவது இடத்தில உள்ளது. டெஸ்ட் தரவரிசையில் 121 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணியை பின்னுக்கு தள்ளி இந்திய அணி முதலிடம் பிடித்துள்ளது. 116 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணி 2ஆவது இடத்தில் உள்ளது.

அதிக இடைவெளியுடன் இங்கிலாந்து மூன்றாவது இடத்தில் காணப்படுகிறது. ஏனைய இடங்கள் மாற்றமின்றி நீடிக்கின்றன.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோத உள்ளன. உலக டெஸ்ட் சாம்பியஷிப்பின் இறுதிப்போட்டி ஜூன் மாதம் 7ஆம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 3ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.